1211

ரேஜிஸ்டர் எம். 916.

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை

வேதாந்த விசாரம் செய்யும்

ஓர் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை

கடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி.ஏ., எம்.ஏ.,

புத்திராதிபர்.

பி. ஆர். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் பி.ஏ., பி.எல்.,

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் காரியதரிசி.

ஸம்புடம் 13.] துந்துபி௵ ஐப்பசீ௴ [பத்திரிகை 1.

1. பத்ராதிபரின் குறிப்புக்கள் ... ... ... ... 1

2. விம்லேஷத்ரய தாத்பர்யம்
காடந்தேத்தி வெ. கோபாலாச்சார்யர். ... 10

3. திருவஹீந்திரபுரம் ஸ்ரீவேதாந்த தேசிகன் ஸபை
அ. வேதாந்தசார்யர். ... 17

4. உபந்யாஸ விவரம். ... 20

5. கடிதங்கள் ... 24

6. ஸ்ரீதேசிகஸ்ய தேசிகத்வம். ... 24

7. வேறுபத்திரிகை ஸங்க்ரஹம். ... 30

8. கோயமுத்தூர் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை. ... 31

9. பகவந்நாம வைபவ நிருபணம்
வேளுக்குடி. ஸ்ரீ. உப. சேஷாத்திரி அய்யங்கார் ... 32

11. தத்வத்ரயம். ... 36

12. வ்யாஸங்கள். ... 39

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்ஸியால்

ப்ரகாரம் செய்யப்பட்டது.

மதராஸ்: ரங்கநாதாகாம் அச்சாபீஸ்.

வார்ஷிக சந்தா ரூ. 3—0—0] [பத்திரிகை 1 அணா 4.

21 JUN

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி.ஏ., பி.எல்.
காரியதர்சி:—பி. ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 13.] துந்துபி௵ ஐப்பசிமீ [ஸஞ்சிகை 1.

"ச்ரத்ததாநா முநயோ ஜ்ஞாநவைராக்யயுக்தயா।
பச்யந்த்யாத்மநி சாத்மாநம் பக்த்யா ச்ருதக்ருஹீதயா॥"

[ஸ்ரீ பாகவதம் 1-2-12.]

## பத்ராதிபரின் குறிப்புக்கள்.

பத்ரிகைகளின் வர்ஷாரம்பத்தில் அந்தந்தப் பத்திரிகையின் [illegible]க்கு ஸம்பந்தப்பட்ட முந்திய வர்ஷத்திய ஸமூஹ வர்த்தமானங்களைப் பராமர்சிப்பது ஸம்ப்ரதாயம். அதையநுஸரித்துச் சென்ற 12 மாதங்களில் ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தின் ப்ரவ்ருத்திகளைப் பார்க்கும்போது நாமிங்கு விசேஷித்துக் குறிப்பிடவேண்டிய விஷயங்கள் அதிகமில்லை. ஆனாலும் ந ப்ராம்மணப்ரசாரத்தின் பலனாக ஆங்காங்கு வைதிகாசாரத்தை ஒருவாறு கிளம்பி வருவது கொஞ்சம் ஆச்வாஸகரமாகத்தானிருக்கிறது. லௌகிகர்களுக்கு ஸம்ப்ரதாய க்ரந்தங்களைக்கற்கும் ஆவல் உண்டாய் வருகின்றது. [illegible]க்கரலப் பழக்கத்தால் நம்மதத்திலும் ஆசாரத்திலும் ஊன்றிய தெளிவும் அபிஸந்தியும் வேண்டிய அளவு உண்டாகாவிட்டாலும் மொத்தத்தில் அபிமானம் தழைக்கிறதென்பதற்கு ஸந்தேகமில்லை. எனினும் நமது ஸமூஹத்தின் முன்னேற்றத்துக்கு நம்பூர்வர்களுபதேசித்து அநுஷ்டித்துக்காட்டிய ஜ்ஞாந வைராக்யங்களே இன்றியமையாத ஸாதநங்களென்பதை நம்மவர்கள் மறக்கக்கூடாது.

## ஓர் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை.

### இதன் முக்கிய நோக்கங்கள்.

1. உபநிஷத்துக்களிலும், ப்ரும்மஸூத்ரம் பகவத்கீதை முதலான கிரந்தங்களிலும், ஆழ்வாராசார்யர்கள் செய்தருளியிருக்கும் ஸ்ரீ ஸூக்திகளிலும் இருக்கும் விசிஷ்டாத்வைத மதத்தின் தத்வங்களை வெளியிடுவது.

2. அத்வைதம், த்வைதம் முதலான மதங்களின் ஸ்வபாவங்களையும் அந்தந்த மதங்களை ஆராய்ந்தவர்களைக்கொண்டு எடுத்துக் வது.

3. தெய்வபக்தி முதலான நற்குணங்களைத் தெரிவிக்கும் இதிஹாஸ புராணக் கதைகளை வெளியிடுவது.

### ஸபையின் 7 - வது சட்டம்.

ஸபையின் வருஷத்திய சந்தா முதல் வகுப்பு சந்தாதாரர்களுக்கு 5 ரூ யும், இரண்டாவது வகுப்பு சந்தாதாரர்களுக்கு 3 ரூபாயும்; அவை புதிதாய்ச்சேருபவர்களுக்கு சேருவதற்காக அனுப்பும் மனுவுடனும் மற்றவர்கள் ஸபையின் பிரதி வருஷ ஆரம்ப முதல் இரண்டாவதுமாத முடிவுக்குள்ளாகவும் செலுத்தவேண்டும். சந்தாவைச் செலுத்த வேண்டிய காலம் கடந்து 3 மீ வரை சந்தா செலுத்தப்படாவிட்டால் அந்த சந்தாதாரர்களின் பெயர்களை ஸபையின் நிர்வாஹஸபையார் நீக்கிவிடலாம்.

* * * * * *

### 12 - வது சட்டம்.

ஸபையின் வருஷம் ஒவ்வொரு வருஷத்திலும் அக்டோபர்மீ முதல் தேதி முதல் அடுத்தவருஷத்திய ஸெப்டம்பர்மீ 30-ம் தேதியுடன் முடிவு பெறும்.

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் மூலமாக கோல்ஹாப்பூர் ஸ்டேஷன் மாஸ்டர் ஸ்ரீ. உ. வெ. ஸ்ரீநிவாஸய்யங்கார் த்ரவ்யஸஹாயம் செய்து தீபிகையின் சென்ற வர்ஷத்தில் நடத்திவைத்த பண்டித உபந்யாஸங்கள் மிக ப்ரயோஜனமுடையவைகளாயின வென்பது தீபிகையில் அப்போதைக்கப்போது ப்ரசுரிக்கப்பட்ட ஷை உபந்யாஸ வரலாறுகளினால் நன்கு விளங்கும். இக்கைங்கர்யத்தை நடத்திவைத்த ஸ்ரீ. உ. வெ. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமியும், ஸ்ரீ. உ. வெ. நெடுந்தெருவு ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியும் அருமையான வேலை செய்திருக்கிறார்கள். இந்தஸ்வாமிகள் திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் வெகு ஊர்களுக்கு எழுந்தருளி அந்தந்த ஸ்தலவாஸிகளால் ஆதரவுடன் வரவேற்கப்பட்டு, அங்கங்கே ஆஸ்திக்ய புத்தியைத் தழைக்கச்செய்து, நமது ஸம்ப்ரதாயத்தில் ஜநங்களுக்கு விசேஷ அபிநிவேசத்தையுமுண்டாக்கி யிருக்கின்றார்கள். பலவிடங்களில் ப்ராம்மணரும் இதரருமான ஸ்ரீவைஷ்ணவர்கள் ஏகோபித்து இவ்வுபந்யாஸங்களை கேட்டு ஆநந்தித்தார்களென்பதும் அறிவிக்கப்படுகின்றது. ஸ்ரீவைஷ்ணவ மதத்தின் தத்வத்தை உள்ளபடி அறிந்தால் ப்ராம்மண இதரர்களுக்கு ப்ராம்மணரிடத்தில் எவ்வித விபரீதநினைவும், ப்ராம்மணர்க்கு விபரீத விஷயருசி ஏதுவும், உண்டாகாவென்பது நமது துணிவு. இத்தகைய உபந்யாஸங்கள் இடைவிடாமல் ஒவ்வொரு ஜில்லாவிலும் நடந்து வந்தால், அதனால் அதிக ப்ரயோஜநம் உண்டாகுமென்பது நிச்சயம். இந்த ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியினுடையவும், இதற்கு முந்திய வர்ஷத்தில் தஞ்சாவூர் ஜில்லாவில் பண்டித உபந்யாஸத்துக்கு த்ரவ்யஸஹாயம் செய்து நடத்திவைத்த டில்லி ஸ்ரீ. உ. வெ. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியினுடையவும் உபகார ப்ரகாரத்தைப்பல ஆஸ்திக தனிகர்களும் உத்யோகஸ்தர்களும் பின்பற்றவேண்டுமென்று ப்ரார்த்திக்கின்றோம். டில்லி ஸ்வாமியின் மனோரதத்தை யநுஸரித்து அவருடைய 2-வது வர்ஷத்திய நன்கொடையானது, நமது ஸமூஹத்தாரின் கர்த்தவ்யதைகளைத் தூண்டு ப்ரசுரங்கள் மூலமாகப் பலவிடங்களில் பரவச்செய்ய உபயோகப்படுத்தப்படுகின்றது. ஷை ப்ரசுரமொன்று சென்றமீ"த்திய தீபிகையில் காணப்படும். கோல்ஹாப்பூர் ஸ்வாமி, ஸ்ரீவைஷ்ணவ தர்மநிஷ்டர்களென்று மற்றவர்க்கு நிதர்சகராகும்படிச் சிலரையாவது தயார் செய்வதற்கு வஸதியுள்ள ஸ்தாபனமொன்றை ஏற்படுத்த வேண்டிய ஆவஸ்ய கதையைக்குறிப்பிட்டு, அப்படி ஒன்றை ஏற்படுத்தினால் தாமதற்கு ரூ. 1500க்குக் குறையாமல் த்ரவ்யஸஹாயம் செய்வதாய், ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை ப்ரவர்த்தகர்களுக்கறிவித்திருப்பதைக் கேட்க ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவரும் ஆநந்தபூரிதராகத்தட்டில்லை. ஸபாப்ரவர்த்தகர்கள் இதை நிறைவேற்றிவைக்கும் ப்ரகாரத்தைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

தென் [illegible]ல்லாவிலும், காஞ்சீபுரத்திலும், நமது ஸபையின் அத்[illegible] (Vice-President) களில் ஒருவராகிய ஸ்ரீ. உ. வெ. வி. வி.



ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீ. உப. வே. வித்வான், பண்டிதபூஷணம் சேட்டலூர் நரஸிம்மாசார்ய ஸ்வாமியைக்கொண்டு செய்வித்த உபந்யாஸ விவரங்களும் தீபிகையில் ஏற்கனவே வெளிவந்திருக்கின்றன. இந்த ஸ்வாமியைக்கொண்டே திருவல்லிக்கேணியில் ஸ்ரீ அஹோபிலமட ஸபையின் முக்ய ப்ரவர்த்தகராகிய ரெவின்யூபோர்டாபீஸ் ஸ்ரீ. உ. வே. ரங்கஸாமி அய்யங்கார் ஸ்வாமி ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாய க்ரந்த ப்ரவசநத்தைச் சென்ற 10 - மாதமாய் ஷைமடத்தில் நடப்பிவைத்து வருவதையும் இங்கு குதூஹலத்துடன் குறிப்பிடுகின்றோம். திருமயிலையில் இப்போது நடந்த ஸ்ரீதேசிகன் உத்ஸவத்தில், பச்சையப்பன் காலேஜ் ந்யாயகலாத்யக்ஷரான (Professor of Philosophy) ஸ்ரீமான் உ. வெ. பி. என். ஸ்ரீநிவாஸாசார்யருடைய முயற்சியினால் நமது ஸம்ப்ரதாய க்ரந்தங்களடங்கிய புத்தகசாலையொன்று ஸ்ரீதேசிகன் ஸந்நிதியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஸ்வாமியின் லௌகிக வ்ருத்தியும் சாஸ்த்ரவிஸ்வாஸமும் இவராரம்பித்திருக்கும் ஸத்காரியத்துக்கு அதிக ஆதரவைக்கொடுக்குமென்பதில் ஸந்தேஹமில்லை. இவருடைய முயற்சியை ச்ரியஃபதி பூர்ணமாக நிறைவேற்றி வைக்கவேண்டும். ஷைஸந்நிதியில் நமது ஸம்ப்ரதாயத்தில் நிஷ்டையுடைய வித்வானொருவரை நிரந்தரமாக நியமித்து அவரைக்கொண்டு ப்ரவசனாதிகளைச்செய்விக்கும் ஏற்பாடு சீக்கிரம் நடக்கும் என்றுகேட்க மிகவும் ஆநந்திக்கின்றோம். தேவாலயங்களின் த்ரவ்யங்கள், கலை,கக்ஷி என்னும் துறைகளில் வ்யயமாகாமல், இப்படிப்பட்ட ந்யாயமான மார்க்கங்களிற் சிலவாவது தான் பகவதபிமதமாகும். இப்பொழுதாவது, இந்த ஸந்நிதியின் நிர்வாஹகர்களுக்கேனும், இவ்வித அபிஸந்தியுண்டாயிருப்பது ச்லாகிக்கத்தக்கதுதான்!

வித்வத்ஸதஸ்ஸுக்களும் பற்பலவிடங்களில் ஆஸ்திகர்களால் நடப்பிவைக்கப்பட்டு வந்திருக்கின்றது. வெகு ஸமீபத்தில் திருக்குடந்தையில் ஸ்ரீதேசிகன் உத்ஸவத்தில், காலஞ்சென்ற ஸ்ரீமான் உ. வெ. வராஹக்குளம் தெருவு ரங்கஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி மூலதனம் வைத்து ஏற்படுத்திய ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தஸதஸ்ஸின் இவ்வர்ஷத்திய நடவடிக்கைகள் வெகு விமர்சையாக நடந்த விவரம் பத்ரிகைகளில் காணப்படுகின்றது. வித்வான்களுக்கும் வித்யார்த்திகளுக்கும் ஸம்மானங்களுக்காக ரூ. 900-மும், ததீயாராதனத்திற்காக ரூ. 300-ம் செலவிடப்பட்டதாம். சென்றவர்ஷத்தில் திருவஹீந்திரபுரத்தில் ஸ்ரீதேசிகன் ப்ரும்மோத்ஸவத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் ஸபையின் இவ்வருஷத்திய வ்ருத்தாந்தங்களின் விவரங்கள் தீபிகையின் மற்றொரு பக்கத்தில் காணப்படும். இவ்வர்ஷத்தில் இந்த ஸபை ஒரு உருப்படியான நிலைமையில் கார்யங்களை நடத்த வாரம்பித்திருக்கிறதென்பதற்கு ஐயமில்லை. இந்த ஸபையின் ஆதரவில் ஒருபாடசாலையும் புஸ்தகசாலையும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸங்கதி குறிப்பிடத்தக்கது. சென்ற வைகாசிமீ"த்தில் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீதேசிகன் ஸந்நிதி

15620

யில் ஹைகோர்ட் வக்கில். ஸ்ரீ. உப. வே. வ. வி. கோபாலாசார்யர் ஸ்வாமி தன் சிலவில் சில வர்ஷங்களாய் நடத்திவரும் வித்வத்ஸதஸ்ஸு ஸம்ப்ரமத்துடன் நடந்தேறின ஸமாசாரமும் ப்ரஸித்தம். அப்படியே ஆழ்வார் திருநகரியில் ஆழ்வார் ஸபையும் ஸ்ரீரங்கத்தில் தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸபையும் சென்ற ஸம்வத்ஸரத்தில் தத்தம் ப்ரவ்ருத்திகளில் ஸாவதானமாகவிருந்து வந்திருக்கின்றன. திருவாரூர் ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தஸபையில் இருகக்ஷிகளும் ஏகோபித்து வர்ஷம் முழுவதும் ஸித்தாந்தப்ரவசநத்தில் உத்ஸாஹத்துடன் அந்வயித்து வருவது நம்மவரனைவரும் கவனிக்கவேண்டிய விஷயம். கோயமுத்தூரில் சென்ற ஆனிமீத்தில் ஸ்ரீமான் ஸி. வி. வெங்கடரமணய்யங்கார் தலைமையின் கீழ் ஓர் ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தஸபை ஏற்படுத்தப்பட்ட விவரம் எற்கனவே தீபிகையில் வெளியாயிருக்கின்றது. ஆரம்பசூரத்வம் மாத்திரமின்றி அந்த ஸபையானது நிரந்தரமான வேலையைச்செய்துவரவேண்டும். கூடியசீக்கிரத்தில் மதுரையிலும், ஸ்ரீ. உ. வெ. வித்யாநிதி R. க்ருஷ்ணமாசார்யஸ்வாமியின் ப்ரயத்நத்தால் ஓர் ஸ்ரீவைஷ்ணவஸபை ஏற்படுமென்று கேட்டு மிகச்சந்தோஷிக்கின்றோம். நாமக்கல்தாலூகா வேலூரிலிருந்து ஸ்ரீ. உ. வெ. கே. டி. பார்த்தஸாரதி அய்யங்கார் மூலமாக ஓர் ஆஸ்திகர் ரூ. 100 அனுப்பி, ஸ்ரீ. உ. வெ. இஞ்சிமேடு ரங்கநாதசார்யஸ்வாமியை அந்த ப்ரதேசங்களுக்கு உபந்யாஸார்த்தமாக எழுந்தருளச்செய்யும்படி ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தஸபையின் கார்யதர்சிக்குத் தெரிவித்ததின்பேரில் அந்த ஸ்வாமியும் அங்கனம் எழுந்தருளியிருக்கின்றார். மற்றவிவரங்கள் பின்னால் வெளிவரும்.

இதையெல்லாம் பார்க்கும்போது நமது ஸம்ப்ரதாயம் இன்னும் நல்ல காலத்தையே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதென்பது விளங்குகின்றது. ஆனால் ஸமுத்திரத்தில் குளம்படி (ஸமுத்ரே கோஷ்பதம்) என்றாற்போல் அபாரமான நமது துர்த்தசையை நிவர்த்திப்பிக்க இந்த ப்ரவ்ருத்திகள் மிகவும் ஸ்வல்பங்கள். நமது ஸமூஹத்தின் ச்ரேயஸ்ஸுக்காகச் செய்யவேண்டிய கார்யங்கள் நிரம்பவிருக்கின்றனவென்பதை நமது அபிமானிகள் கவலையுடன் ஆலோசிக்கவேண்டும். இவற்றில் முக்கியமானது நமது சிறுவர்களின் எதிர்காலவாழ்வு. நாட்டில் நடந்துவரும் ராஜீய கிளர்ச்சிகளின் பலனாக ப்ராம்மணர்கள் ஓர் புறத்தில் ஸ்வரூபநாசகரங்களான வித்யையிலும் பழக்கங்களிலும் தமக்குள்ள ஸம்ப்ரதாயத்தை ஒழித்துவிட்டு, மற்றொரு பக்கத்தில் ஏழைமையில் வாழ்வதும் வைதிக ஸ்ரீயையுமிழந்து, தவிக்கும் நிலைமை ப்ரளயாபத்தைப்போல் வந்துவிட்டது. இந்த துர்த்தசையை நிவர்த்திப்பிக்கும் கடமையை நம் ப்ரமுகர்களும், தனவான்களும், மடாதிபதிகளும், ஆசார்யஸ்தாநம் வஹிப்பவர்களும் எல்லோரும் உணர்ந்து ஒன்றுபட்டு உழைத்தாலன்றி, வருங்காலத்தில் நமதுகதி அதோகதியாய்விடும். ப்ராம்மண்யம், கெட்டாலென்ன வென்றிருப்பவர்க்குக்கூட ப்ராம்மணராய்ப்பிறந்திருப்பதே உத்யோகம் ஸம்



பாதிப்பது முதலியவைகளுக்கு ப்ரதிபந்தகமாயிருப்பது ப்ரஸித்தம். ஆஹாரவிஹாராதி நியமங்களைக்கடக்கும் ஸோஷியல்ரிபார்ம் ப்ரவ்ருத்திகளுக்கு இனி ஓர் வேலையுமில்லை. ஸ்வரூபநாசந்தான் மிகுந்தது. ஆகையால் அபிமானிகளனைவரும் இவ்விஷயத்தில் விசேஷ ச்ரத்தையை எடுக்கும்படி நமது சக்தியிடங்கொடுக்கும் பர்யந்தம் வற்புறுத்தி ப்ரார்த்திக்கின்றோம்.

*　　*　　*　　*　　*　　*

சென்னை ஸம்ஸ்க்ருதகாலேஜிலிருந்து ஸர்வகலாசாலையின் 'மீமாம்ஸா சிரோமணி' பட்ட பரீக்ஷையில் முதன்மையாய்த்தேறின ப்ரும்மஸ்ரீ ஜீ. கே. ராமஸுப்ரம்மண்ய சாஸ்த்ரிகளுக்கு, கும்பகோணம் ஜகத்குருஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் தனிமையாக ஒரு உபகாரச்சம்பளம் கொடுத்து, அந்த சிரோமணியை அந்த காலேஜ் ப்ரதம உபாத்யாயரான சாஸ்த்ரரத்னாகரம் ப்ரும்மஸ்ரீ வெங்கட ஸுப்ரமண்ய சாஸ்திரிகளிடம் பூர்வோத்தர மீமாம்ஸைகளின் உத்க்ரந்தங்களைப்படித்து அபிவ்ருத்திசெய்ய ஏற்பாடு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது. இது ஸஹ்ருதயர்களுக்கு மிக ஸந்தோஷத்தைக்கொடுக்குமென்பதில் ஸந்தேஹமில்லை. தமது ஸித்தாந்த ப்ரசாரவிஷயத்திலும், வித்யாபிவ்ருத்தியின் கார்யத்திலும் இந்த ஸ்வாமிகளின் ப்ரயத்நங்களை மற்ற மடாதிபதிகளும் அநுஸரித்தால், அந்தந்த ஸம்ப்ரதாயங்களினுடையவும் உத்தரோத்தராபிவ்ருத்திக்குக் குறைவுண்டாகாது. இத்துறைகளில் ஸ்ரீவைஷ்ணவப்ரமுகர்களின் (வைதிகருடையவும், லௌகிகருடையவும்) ப்ரவ்ருத்திகள் மிகக்குறைவாயிருப்பதைப்பற்றி வருந்துகின்றோம். கக்ஷிப்ரயுக்தமான விவாதங்களும் அவற்றையொட்டிய கார்யங்களும் மாத்திரம் இன்னம் ஒழிந்தபாடில்லை ; ஒருபுறத்தில் அதிகமாய்க்கொண்டே வருகிறதென்னலாம். இவை சிலர்களுக்குப் பொழுது போக்காயும் ஜீவிகையாயுமிருக்கின்றதுபோலும்! மான்யர்களான வித்வான்களின் தொகை குறைந்து வந்து தற்காலம் இரண்டொருவரைக்கூடக் கண்டு பிடிப்பது அரியதாய்விட்டது என்றுமாத்திரம் சொல்லப்படுகின்றதேயன்றி, சாஸ்த்ராப்யாஸத்துக்கு வஸதிகளையும் வித்யார்த்திகளுக்குக் காலக்ஷேப உசிதமான ஸஹாயங்களையும் செய்துகொடுக்க யார் முன் வந்திருக்கிறார்கள் ? ஒவ்வொருவரும் தாம் ஸ்வார்த்தபரராய் த்ரவ்யார்ஜ்ஜநம் விஷயபோகம் முதலியவைகளையே கவனித்துக்கொண்டு, சாஸ்த்ராப்யாஸத்துக்கும் அநுஷ்டாநாதிகளுக்கும் ஏற்படவேண்டியவர்கள் மற்றவர்களென்றும், தமக்காவது தம்கையில் அகப்பட்ட த்ரவ்யத்துக்காவது அவற்றோடு ஸம்பந்தமில்லையென்றும் நினைப்பது வெகுசுலபமாய் விளங்கிவிடுகின்றது! இதுவா ஸ்ரீவைஷ்ணவராய்ப்பிறந்து வளர்வதின் ப்ரயோஜநம் ?

ப்ராம்மணர்க்குள் ஸ்ரீவைஷ்ணவர்களில் ஆஸ்திக்யம் உண்மையிற்குறைந்துவிட்டதென்றும், ஆனால் கோவில்களும் மரியாதைகளும் ப்ரணாதங்க

ளும், அவர்கள் வசத்திலிருப்பதால் அதற்காகச்சிலர் ஸ்வயநலத்தைக்கருதி வைதிகவேஷம்போட்டுப் பிறரை ஏமாற்றுகிறார்களென்றும், ஸ்ரீவைஷ்ணவ மதத்திலுள்ள ஸாரம் அவ்வளவுதானென்றும் ஏனையோர் ஏசுவதை நாம் செவிசுடக்கேட்டிருக்கின்றோம். இதற்கு என்ன ஸமாதானம் கூறுவது? உண்மையில் ஸ்மார்த்த ப்ரமுகர்களைப்போல் ஸ்வமத ஸ்வசாஸ்த்ராபிவிருத்திகளுக்காகத் தம் த்ரவ்யத்தை ப்ரீதியுடன் கொடுப்பவர்கள் நம்மவரில் எவ்வளவு பெயர்களிருக்கிறார்கள்? நம்மவர்களின் அபிமானம்தான் எம்மட்டிலுள்ளது? ஸ்ரீமந்மத்வ ஸித்தாந்த உந்நாஹிநி என்னும் த்வைத ஸபை எவ்வளவு செல்வமுள்ள நிலைமையில் நிலைத்து எத்தனை வர்ஷகாலமாய் நடந்து வருகின்றதென்பதை அறியாதவர்களுமுண்டோ? வைதிகரெனப்படுமவர்களின் மனோபாவமும் முழுவதும் த்ருப்திகரமென்பதற்கில்லை. பரமபுருஷன் வரிப்பதற்கீடான குணாதிசயங்கள் தாம் தவிர வேறொருவரிடத்திலுமில்லையென்றும், 'யூயம் யூயம் வயம் வயம்' (அர்த்தகாமபரர்களாகையால் நீங்கள் நீங்களே; பரமைகாந்திகளான நாம் நாமே, நம்மிருவர்க்கும் ஸம்பந்தமில்லை) என்பது தம்பெருமையையும் தம் நன்மையைப்பாராட்டுவதையும் மாத்திரம் ப்ரகடநம்பண்ண ஏற்பட்டவையென்றும் நினைத்து நடப்பவர் பலர். இவ்விருவித வைபரீத்யங்களையும் மாற்றி ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வரூபப்ராப்தமாய் நமது ஸமூஹத்திற்கு ச்ரேயஸ்கரங்களாயிருக்கும் கைங்கர்யங்களில் நம்மவர்கள் ஏகோபித்து அந்வயித்து ஒவ்வொருவரும் தம்மாலியன்றமட்டில் குதூஹலத்துடன் த்யாகம்செய்து உழைப்பதே பரமபுருஷார்த்தம் என்னும் புத்தியையும், அதற்குத்தகுந்த ப்ரவ்ருத்திகளிலிழியுமபிஸந்தியையும், நம்மவர்க்கு அளிக்கும்படி ஸ்ரியபதியான ஸர்வேச்வரனை இவ்வர்ஷாரம்பத்தில் அதிக விநயத்துடன் ப்ரார்த்திக்கின்றோம்.

*   *   *   *   *   *

மைசூர் ராஜ்யத்தில் மைசூர் நகரத்திலும் பெங்களூரிலும் ஆக இரண்டு ஸம்ஸ்க்ருதக் கலாசாலைகள் ஸமஸ்தானத்தரசரால் ஏற்படுத்தப்பட்டு நெடுங்காலமாக நடந்து வருகின்றன. இவற்றில் ஸாமான்ய சாஸ்த்ரங்களுடன் வேதவேதாங்கங்களும் கற்பிக்கப்படுகின்றன. வித்யார்த்திகள் ப்ராம்மணர்களாகவே இருந்து வந்திருக்கின்றார்கள். இரண்டு மூன்றுவருஷங்களாகச் சென்னை ராஜதானியில் நடந்துவரும் நப்ராம்மணக்கிளர்ச்சி அந்த ராஜ்யத்திலும் பரவி, ஸமீபத்தில் அங்கிருக்கும் லிங்காயத்தார்கள் ப்ரதானமாய் முன்வந்து இவ்விரு ஸம்ஸ்க்ருதக் கலாசாலைகளிலும் வேதவேதாங்கங்கள் உட்பட எல்லாவகுப்புகளிலும் இதரர்களையும் ப்ராம்மணப்பிள்ளைகளுடன் சேர்த்துக்கொண்டு வேதபாடாதிகளையும் அவர்களுக்கு ப்ராம்மணப்பண்டிதர்கள் கற்றுக்கொடுக்கவேண்டுமென்று கிளர்ச்சி செய்துவந்ததில் ஸமஸ்தானாதிகாரிகள் இவ்விஷயத்தைத்தீர விசாரித்து முடிவு செய்ததாவது:— (1) மைசூரிலிருக்கும் கலாசாலையானது இதுவரையிலிருந்த மாதிரியே பழையவைதிகவித்யையை அபிவிருத்தி செய்வதற்கான முக்ய ஸ்தலமாய் ப்ராம்மணர்க்கு மாத்திரம் என்றிருக்கவேண்டும். (2) பெங்களூர் காலேஜில் காவ்யம் ஸாஹித்யம் முதலிய வகுப்புகளில் எல்லாஜாதியாரும் சேர்ந்துபடிக்கலாம். ஆனால் வேதம், ப்ரயோகம், முதலியவைகள் ப்ராம்மணர்க்கு மட்டுமே தனிவகுப்பாகக்கற்பிக்கப்படும். ஸாமன்ய சாஸ்த்ரங்களையும் ப்ராம்மண இதரர்க்குக் கற்பிக்க இஷ்டப்படாத பண்டிதர்கள் வேறு இடங்களுக்குத் தங்களை மாற்றிக்கொண்டுவிடலாம்— என்று. இந்த ஏற்பாட்டின்பேரில் கலாசாலைகள் நடந்துவரவேண்டுமென்றும், நாளடைவில் ப்ராம்மண இதரர்களுக்கும் வேதவேதாங்காதிகளைக்கற்றுக் கொடுக்கச் சம்மதிக்கும் பண்டிதர்கள் கிடைக்கும்போது அவர்களுக்கும் எல்லாப்பாடங்களையும் படிக்கும் வஸதிகள் பெங்களூரில் செய்துகொடுக்கப்படுமென்றும் சொல்லப்பட்டது.



ஆக்ரஹமில்லாமல் விஷயங்களைக் கவனிப்பவர்களுக்கு இது மிகவும் த்ருப்திகரமான ஏற்பாடென்பது தெளிவாய்ப்புலப்படும். ஆனால் லிங்காயத்து ப்ரப்ருதிகள், முன்னைவிட அதிகமாய் முனைந்து மைசூர் அரசாங்க நிர்வாஹகர்களுடன் வாதாடி வருகிறார்கள். இதில் ஒருஸ்வாரஸ்யமிருக்கிறது. லிங்காயத்துமதம் வைதிகமதத்துக்கு நேர்விரோதமானது, இதற்கடிப்படையான ஜாதிநியமத்தையும் வேதப்ராமாண்யத்தையும் அம்மதம் முற்பட ஒழித்திருக்கிறது. அதில் தீவ்ரநிஷ்டர்கள் ப்ரதிதினமும் நித்ரையை விட்டு எழுந்திருக்கும்போது முதலில் 'விப்ரக்ஷயம்' (ப்ராம்மணர்நாசம்) என்று அநுஸந்திப்பார்களென்றும் சொல்லப்படுகின்றது. வேதத்தை ஒப்புக்கொண்ட மதங்களில் வைஷ்ணவமல்லாதவைகூட சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் ஸமத்வத்தையாவது அங்கீகரிக்கின்றன. லிங்காயத்தர்களுக்கு விஷ்ணுவினுடையவும் வைஷ்ணவர்களுடையவும் பரம்பராஸம்பந்தங்கூட இசையத்தகாதது. அவர்கள் வைஷ்ணவ ப்ராம்மணர் தொட்ட பாத்திரத்தை சுத்தி கொண்டுகூட அதில் ஜலம் குடிக்கமாட்டார்கள். இவ்வளவு வைதிக விரோதிகள் தங்களுக்கு ப்ராம்மணர் வேதவேதாங்கங்களைக் கற்பிக்கவேண்டுமென்று ப்ரமாதமாகக் கிளர்ச்சிசெய்வது ஆச்சரியமே! ஸர்க்கார்ப் பணத்தினால் நடத்தப்படும் கலாசாலைகள் எல்லார்க்கும் பொதுவாம்! ப்ராம்மணர்க்கென்று ஒரு ஏற்பாடுகூடாதாம்! ஆகையால் தான் இதுவரையில் ஸம்ஸ்க்ருதத்தையும் வேதத்தையும் காதில் போட்டுக்கொள்ளாமலிருந்த நப்ராம்மணர்கள், ப்ராம்மணர்க்கிருப்பதாக ப்ரமிக்கப்படும் ஆதிக்யத்தை யொழிப்பதற்காகவே இவ்விதக்கக்ஷிகளைக் கட்டிவருகிறார்கள் போலும்! ஐரோப்பியர்க்கென்றும் மகம்மதியர்க்கென்றும் அவரவர்கள் மதப்படிப்புக்களைக்கற்பிக்க ஏற்பட்ட தனிப்பட்ட வித்யாலயங்களுக்கு ஸர்க்கார்ப் பணம் உதவப்படுவது ந்யாயமானால், ப்ராம்மணர்க்கு மாத்திரம் ஏன் அவ்வுரிமை கூடாதோ? தெரியவில்லை!

தவிர மைசூர் மன்னவர் வைதிகமதத்தை யனுஸரிக்கும் ஹிந்து. அவர்கள் வம்சபரம்பரையாக ஸ்ரீபரகாலமடத்து ஸ்வாமிகளின் சிஷ்யர்கள். வைதிகங்களான த்ரிமதங்களையும் அவற்றின் மடாதிபதிகளையும் ஆதரிப்பவர். அவ்விராஜ்யமும் ஹிந்துராஜ்யம். வைதிகமதத்தின் கோட்பாட்டின்படி த்விஜர்களே வேதத்தை உச்சரிக்க அர்ஹர்கள். ப்ரயோக க்ரந்தங்கள் யஜ்ஞம் முதலிய வைதிகக்ரியைகளைச் செய்யும் ப்ரகாரங்களைச் சொல்லுமவை. இவற்றில் வைதிகமதம் அடியோடு தடுமாடும் இக்காலத்தில் திடீரென்று நப்ராம்மணர்க்கு ஒரு அக்கரை யுண்டாய்விட்டதென்றால், ஸர்வப்ரஜைகளையும் ஸம்ரக்ஷிக்கக்கடமைப்பட்ட அதிகாரிகள் இதைச்சற்று நிதானமாகவே கவனிக்க வேண்டும். கீழ்ச்சொல்லிய ஏற்பாட்டில் மைசூர் அதிகாரிகள் அப்படியே நடந்துகொண்டிருக்கின்றார்கள் என்பதேற்படுகின்றது. இரண்டு கலாசாலைகளில் ஒன்றில் வைதிகஸம்ப்ரதாய அநுவர்த்தநத்தை நிறுத்தி, மற்றொன்றில் ஆஸ்திகர்களுடைய நிகழ்ச்சிக்கிணங்க உசிதமான மாறுபாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதில் ப்ராம்மணராவது இதரராவது குறைகூற இடமில்லை. உண்மையில் ஸம்ஸ்க்ருத வித்யையைக்கற்க அபேக்ஷிக்கும் ப்ராம்மணஇதரர்கள் தங்கள் அபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ள ஒருவித ப்ரதிபந்தகமுமில்லை. ஆனால் அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பவர்களுக்கு எதுதான் த்ருப்திகரமான ஸமாதானமாகும்? நமது மாகாணத்தில் ஸம்ஸ்க்ருத வித்யைக்குச்சிலவிடும் ஸ்வல்பத் தொகையையும் நிறுத்திவிடவேண்டுமென்று ஒரு அங்கத்தினர் நமது சட்டச்சபையில் ப்ரேரணை செய்தது நேயர்களுக்கு ஜ்ஞாபகமிருக்குமே!

*    *    *    *    *    *

திருக்குடந்தையில் ஸ்ரீ ஆராவமுதன் ஸந்நிதியில் மூலபிம்பத்திற் சிறிது பங்கம் உண்டாயிருப்பதாயும், புதிதாக மூலபேரமெழுந்தருளப்பண்ணி மஹா ஸம்ப்ரோக்ஷணை பண்ணவேண்டிய ஆவச்யகதை ஏற்பட்டுவிட்டதென்றும், அதற்காக அவ்வூர் ப்ரமுகர்கள் கூட்டங் கூடி, ஷை கோயில் மானேஜ்மெண்டு ஸம்பந்தமாகக் கோர்ட்டில் வழக்கு நடந்து கொண்டிருந்தபோதிலும், ஸர்வஜநச்ரேயஸ்கரமான இக்கைங்கர்யத்தை எல்லோரும் ஐகமத்யத்துடன் நடத்திவைக்கவேண்டுமென்று தீர்மானித்து, அதற்காக ஸ்ரீ. உ. வெ. ராவ்பகதூர் என். க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் தலைமையின் கீழ் ஒருகம்மிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறதென்றும் பத்ரிகைகளில் அறிவிக்கப் பட்டிருக்கிறது. ஸ்ரீமான் என். க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் இத்தகைய கைங்கர்யத்தில் ஏற்கனவே ஊக்கம் காட்டியிருக்கிறார். சுமார் 4-வருஷத்துக்குமுன் ஒப்பிலியப்பன் ஸந்நிதியில் இதேமாதிரியான கைங்கர்யத்தை அவரும், அவர் ஸஹோதரர் ஸ்ரீமான் உ. வெ. பிச்சுவைய்யங்காரும், அந்த ஸந்நிதியின் வ்ருத்தபஞ்சாயத்துதாரராகிய ஸ்ரீ. உ. வெ. அண்ணுவய்யங்கார் ஸ்வாமியும் சேர்ந்து மிக விமர்சையுடன் நடத்திவைத்ததை ஆஸ்திகர்கள் அறிவார்கள். ஆகையால் ப்ரஸ்தாபக்கம்மிட்டியில் ஸ்ரீமான் க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் முதன்மையை வஹிப்பதிலிருந்தே இக்கைங்கர்யம் வெகுநன்றாய் சாஸ்த்ரஸம்மதமாய் நடந்தேறும்படி ஸ்ரீ ஆராவமுதன் திருவுள்ளம் பற்றியிருக்கிறார் என்று தீர்மானித்து விடலாம்.



நமது ஸித்தாந்தத்துக்கு உயிர்நிலை யென்னும்படியான தேவாலயங்களில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் பலவிருக்கின்றன. அவற்றில் ப்ரதானமாயிருப்பது பகவதாராதன நியமமும், அதற்குக் கீழ்க்குறித்தபடி தடங்கல் நேரிடும் காலங்களில் செய்யவேண்டிய ஸம்ப்ரோக்ஷணதிகளும். இவ்விஷயங்களில் வைதிகர்களான பெரியோர்கள் சாஸ்த்ரமுறைகளைத் தெரிவித்து அவை ஸரியாக அநுஷ்டிக்கப்படுகின்றனவா வென்று கவனிக்கவேண்டும்; லௌகிகர்கள் அவர்களுக்கு ஸஹாயமாகவிருக்கவேண்டும். அப்போது தான் ஆலயஸ்ரீ ஸம்ரக்ஷிக்கப்படும்; பகவத் ஸாந்நித்யமும் இருக்கும்.

ஸமீபத்தில் திருவெவ்வுளூரிலும் ஸ்ரீவீரராகவனுடைய மூலபிம்பத்துக்கு இதே மாதிரியான கைங்கர்யம் செய்ய நேரிட்டதென்று அறிகிறோம். ஆனால் அதைப்பற்றிய ஸம்ப்ரமங்கள் அதிகமாக ப்ரகடனம் செய்யப்படவில்லை. அந்த ஸந்நிதி ஸ்ரீஅஹோபிலமடத்தின் ஏகதேச அதிகாரத்துக்குட்பட்டது.

பூர்விகங்களான திவ்யதேசங்களிலெல்லாம் பகவத்விக்ரஹங்களும் அதிக காலமானவைகளாயிருக்குமாகையால் ஆலயாதிகாரிகள் எல்லாவிடத்திலும் பகவத்விக்ரஹங்களை நன்றாய்ப் பராமர்சித்து வைக்கவேண்டியதும், புதுப்பிக்கவேண்டிய விடங்களில் ஸாளக்ராம சிலைகளினாலே சாச்வதமூர்த்திகளாக எழுந்தருளப்பண்ணவேண்டுவதும், அப்படிச் செய்யும்போது சிலவையுஞ் ச்ரமத்தையும் பாராமல் ஆகமசாஸ்த்ரமுறைப்படி மஹாஸம்ப்ரோக்ஷணதிகளை நடத்திவைக்கவேண்டுவதும் அவச்யமென்பதைக் குறிப்பாய் அறியவேண்டும்.

---

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனருளிச்செய்த

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம்.

பண்டித பூஷணம் ஸ்ரீ. உ. வே. சேட்டலூர் நரஸிம்மாசாரியர் ஸ்வாமியின் தமிழ் வ்யாக்யானத்துடன் விலை ரூ. 6 8 0. பயிண்டு செய்யாதது விலை ரூ. 6 0 0. வேண்டியவர்கள், கார்யதர்சி, ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸபை, பர்ணசாலை, வீராசாமிபிள்ளை தெரு, எழும்பூர், மதிராஸ். என்னும் விலாசத்துக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ஹயவதந பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

ஸந்தாய ந கல்யாணம் ஸந்தாநம் ஸம்பதாம் காரணம் ।

ஜகதீஶா ந மங்களம் மங்களம் வந்தாமஹே மங்கள: ॥

# விச்லேஷத்ரயதாத்பர்யம்.

## [ஸ்ரீமத்ராமாயணத்தில் கூறப்பட்ட பிராட்டியின் மூன்று பிரிவுகளின் நிரூபணம்.]

ஸ்ரீவைஷ்ணவர்களான நம்மதம் எம்பெருமான் எப்பொழுதும் லக்ஷ்மியாகிற பெரியபிராட்டியாருடன் பிரிவில்லாத சேர்த்தியுடையவனும் ஜகத்காரணமாயும், எல்லையில்லாத மஹிமையுடையவனும், மோக்ஷத்தின் பொருட்டு உபாஸிக்கத்தகுந்தவனும், முக்தர்களால் அனுபவிக்கத்தகுந்தவனுமிருக்கிறனென்பதை கூறுகிறது. ஆதலால் நம்மவர்கள் உபயநாயகர்கள். அதாவது லக்ஷ்மீநாராயணர்கள் இருவரும் சேர்ந்தே ப்ராப்யம்ப்ராபகம் என்ற அத்யவஸாயமுள்ளவர்களென்று சொல்லப்படுகிறர்கள். ஏகாயநர் தம் ஸர்வாவஸ்தையிலும் லக்ஷ்மீவிசிஷ்டமாக ஈச்வர ப்ராப்யகத்தை இசைகிறதில்லை. அதை நிஸ்ரீகவாதமென்று நம் ஆசார்யர்கள் உபேக்ஷித்தார்கள். நம் ஸித்தாந்தத்தில் 'நித்யைவைஷா ஜகந்மாதா விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ । யதா ஸர்வகதோ விஷ்ணுஸ் ததைவேயம் த்விஜோத்தம ॥' என்று ஜகத்திற்கு மாதாவாகிய பிராட்டி எம்பெருமானைப்போதி நித்யையாயிருக்கிறள்; அவள் எப்பொழுதும் அநபாயிநீயாய், அதாவது விட்டுப்பிரியாமலிருக்கிறள்; ஸர்வ வ்யாபியான எம்பெருமான் எந்த ஸ்வரூப ஸ்வபாவமுள்ளவரோ, அதேவிதமான ஸ்வரூப ஸ்வபாவ முள்ளவள் என்றும், எம்பெருமானை விட்டுப் பிரிவதில்லையென்றும், ஸர்வவ்யாபிநீ யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத் ராமாயணத்தில் பகவான் 'நித்யஸ்ரீ:' (இறையுமகலகில்லேன் என்று அலர்மேல்மங்கை யுறைமார்பன்) என்று வால்மீகி வெளியிட்டார். நம் பரமாசார்யரான ஸ்ரீநிகமாந்ததேசிகனும், 'ஸ்ரீவத்ஸாந்யாஸ்பதம்'



(திருமார்பில் நித்யயோகம் காட்டில் ப்ரகாசிக்கும் நிலாபோலிராமல் ஸமவாயத்துக்கு அதிசயத்தையும் விளைவிக்கிறதென்று, பிராட்டியின் ஸாரணாரவிந்தத்தால் க்ருதார்த்தமாயிருக்கிறது அவன் வக்ஷஸ்) என்று அதின் நித்யயோகத்தையும் உபயோகத்தையும் சேர்த்து அனுஸந்தித்தார். அப்படி இணைபிரியாமலிருப்பதால் எப்பொழுதும் அபராதமுள்ளவர்களான சேதநர்களால் கூசாமல் புருஷகாரமாய்ப்பற்றி ஆச்ரயிப்பதற்கு அர்ஹையாயிருக்கிறள். க்ஷணகாலம் விட்டுப்பிரிந்தால் அபராதிகளான சேதநர்களுக்கு என்ன அவத்யம் வருமோவென்று நெஞ்சாறல்பட்டு பகவானுடைய கோபத்திற்குத் தடையாயிருந்து எப்பொழுதும் திருமார்பில் வஸித்துவருகிறள். ஸம்ஸாரத்தில் ஆவாரார் துணையென்றலமருகிற சேதந வர்க்கங்கள் முன்னம் பிராட்டியைப் புருஷகாரமாக வரித்தாலல்லது ஈசுவரன் இரங்காணுகையாலே அவளைப்பற்றவேண்டும். எப்பொழுதும் அநபாயிநீயாயிருக்கிற பிராட்டிக்கு தன்னிச்சையால் சேதநர்களிடத்தில் அனுக்ரஹத்தால், பகவான் எப்படி ப்ருகுமஹர்ஷி முதலானவர்களின் சாபத்தை வ்யாஜமாக வைத்துக்கொண்டு ஆவிர்பாவம் திரோபாவம் (தோன்றல் மறைதல்) இவைகளைத் தன்னிச்சையால் அங்கீகரிக்கிறனோ அப்படியே பிராட்டிக்கும் தன்னிச்சையாய்த் தோன்றுவதும் துர்வாஸஸ் சாபத்தால் மறைவதுமாயிருக்கும். ஆகப்பிராட்டி தன்னுடைய புருஷகார பலத்தையும், அதற்குப்பின் குணங்களையும் விச்லேஷத்ரயத்தால் வெளியிட்டபடியைக்கொஞ்சம் நிரூபிப்போம்.

இதிஹாஸங்களுள் உயர்ந்ததான ஸ்ரீமத் ராமாயணம் என்கிற ஒரு ப்ரபந்தம் முக்கியமாய் பிராட்டியின் வைபவத்தையே குறிப்பாகச்சொல்லுகிறதென்று அநேகர் நிர்வஹிக்கிறர்கள். வால்மீகி மஹர்ஷி, 'ஸீதாயாச் சரிதம் மஹத்' (ராமாயணகாவ்யம் முழுதும் ப்ரதாநமாய் ஸீதையின் சரித்ரத்தையே ப்ரதிபாதிக்கிறது) என்று கண்டரவேண அருளிச்செய்தார். பட்டர் என்கிற அபியுக்தாக்ரேஸரர் 'ஸ்ரீமத்ராமாயணமபி பரம் ப்ராணிதி த்வச்சரித்ரே' (ஸர்வோத்க்ருஷ்டமான புருஷார்த்த ப்ரதிபாதகமாகிற ஸ்ரீயையுடைய ஸ்ரீமத் ராமாயணமும் தேவரீருடைய திவ்யசேஷ்டிதத்தை, ப்ரதாநமாக ப்ரதிபாதித்து ப்ராணதாரணத்தைப் பெருகிறது) என்றருளிச்செய்தார். ஸ்த்ரீப்ரஸங்கமென்றே மொழிந்தார் ஆபாணகர். முக்கியமாய் கதாநாயகர்களான பாண்டவர்களின் சரித்திரத்தை விஸ்தாரமாய்ச் சொல்லுகிற பாரதக்கதையை இடையிடையில் பகவானை வர்ணித்து அவர்களுடைய ஆணைத்தொழில்களைக் குறிப்பிட்டு அவன் இன்னார் தூதனென நின்றான் என்றபடி தூதுபோன ஏற்றத்தை விளக்குகிறபடியால் நாராயணகதை என்று

கொண்டாடுகிறுப்போலே ‘ த்ரைலோக்ய ராஜ்யம் ஸகலம் ஸீதாயா நாப்நுயாத் கலாம் ’ என்று பெருமாளும் அவன் விபூதியுமடங்க ஒரு தட்டுக்குப்போருமலிருக்கும்படியான மாகாத்மியத்தை யுடைத்தாயிருக்கையாலே, ‘ அப்ரமேயம் ஹி தத்தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா ’ என்று பெருமாளுக்குக்கூட அதிசயத்தை விளைவிக்குமவளாகையாலே அப்பிராட்டியின் சரித்திரத்தை ‘ ஸீதாயாஶ்சரிதம் மஹத் ’ என்றுகொண்டு அந்த நாராயணனாலும் கொண்டாடத்தகுந்ததாயிருக்கிறது. இதை ‘ மமாபி தத் பூதிகரம் ப்ரசக்ஷதே மஹாநுபாவம் சரிதம் நிபோதத ’ (எனக்கும் பேற்றைக்கொடுக்கக்கூடிய மஹாநுபாவமாகிய சரித்ரம் சொல்லப்படுகிறது, அதைக்கவனமாகக்கேளுங்கள்) என்று ஜகந்நாயகனான ஸர்வேச்வரனான சக்ரவர்த்தித்திருமகனே கொண்டாடினான். இதுகேவலம் தன்னுடைய வைபவத்தை மாத்திரம் சொல்லுவதாயிருந்தால், ஸதஸ்யர்களைப்பார்த்து இந்த சரித்ரத்தைக் கேளுங்கள் என்று சொல்வதும், ‘ மஹாநுபாவம் ’ என்று தானே ஸ்தோத்ரம் செய்வதும் அஸங்கதமாகிவிடும். தீரோதாத்த புருஷன் தன்னை ச்லாகித்துக்கொள்ளமாட்டானிறே. ஸீதையின் சரித்ரமே ப்ரதாநமாய் ப்ரதிபாத்யமாயிருப்பதால்தான், ஸீதாவிரஹத்தால் கர்சிதனான வெனக்கும் ஆச்வாஸகரமாயிருப்பதாலும், அதையே எல்லாரையும் கேட்பிக்கச்செய்வதும், ‘ மஹாநுபாவம் ’ என்று தான் ச்லாகிப்பதும் பொருந்தும். ஆகவே, ‘ராமாயணம்’ என்று ஸ்ரீராமனுடைய குணங்களை அறிவதற்குத்தகுந்த நூல், என்று பொருள்படுவதுபோல, ‘ராமா—அயனம்’ எனப்பிரித்துப் பிராட்டியின் குணம் கூறும் நூல் யென்று சொல்வதும் இங்ஙனம் பொருத்தமேயாகும்.

இந்த ஸ்ரீமத்ராமாயணத்தில் சிறையலிருந்தவளான பிராட்டியின் ஏற்றம் சொல்வதாகும். இதை நம்மாழ்வார் ‘ தளிர் நிறத்தால்.........தனிச்சிறையில் விளப்புற்ற கிளிமொழியாள் காரணமா ’ என்று அருளிச்செய்தார். தாயும்தமப்பனும் ஒக்க இருக்கப்பொறுத ராவணனால் அதிக்ரூரமான சிறையில் தான் இருக்கச்செய்தேயும், அநேக தேவதாஸ்த்ரீகளைச் சிறையிலிருந்து மீட்பதற்காகத் தான் சிறையிருந்தாள் என்று புகழ்தோன்ற விளங்கினாள் என்று அர்த்தம். ஸர்வேச்வரன் மநுஷ்ய ஸஜாதீயனாய் பூலோகத்தில் அவதாரம் பண்ணுகை ‘ ஸ உ ஶ்ரேயாந் பவதி ஜாயமாந: ,’ ‘பல பிறப்பாய் ஒளிவரும் ’ என்றும் சொல்லுகிறபடி அவனுக்கு தேஜஸ்கரமாகிறதுபோலே, தன்னிச்சையால் ‘ [illegible] ’ என்றும், ‘ [illegible] ’ என்றும் சொல்லுகிறபடி அவனுடைய தர்மத்தைப்போன்ற சிலதர்மத்தை ஆசரிக்கைக்காக இப்படி அவதாரம் பண்ணி, சிறையிலிருந்த தேவதாஸ்த்ரீகளைக் காப்பாற்றுவதற்காகத்தான் சிறையிருந்தது மேன்மையன்றோ? இப்போர்க்கொத்த சிறையில் வாஸம் கர்மத்தால் ஏற்பட்டாலன்றோ தாழ்மைக்கிடமாவது! தன்னிச்சையால் வலியச் செய்ததாகையால் ஏற்றத்துக்குடலாமிது. ராவணன் பலாத்காரத்தால் நேர்ந்ததென்று சொன்னால் தப்பான யோஜனைக்கிடமாகும். ‘ ஶீதோ பவ ஹநூமத: ’ என்று ஹநுமானுடைய வாலில் கிளர்ந்தெறிந்த அக்னிஜ்வாலையைச் சந்தனக்குழம்பைப்போல் செய்தவளுக்கு ‘ [illegible] ’ என்று சொன்னால் ராவணன் படுவது அஸாத்யமோ? அப்படியிருந்தும் மநுஷ்யபாவனையைப் பண்ணி தர்மங்களை ஆசரிப்பதற்குச் சிறையிலிருந்தாள். சேதநர்களை பகவான் திருவடிகளை ஆச்ரயிக்கப்பண்ணுவதற்கும், அவர்களுடைய அபராதத்தைப்பார்த்து வெறுவாமல் பொருப்பிக்கைக்கும் காரணமாய் புருஷகாரையான பிராட்டியின் ஆச்ரயணம் அவசியமானதால் புருஷகாரவைபவம் சொல்லப்படுவதாக ஆசாரியர்கள் எண்ணுகிறார்கள். நம் ஸித்தாந்த ப்ரவர்த்தகரான உடையவர் திருமலைநம்பியென்கிற மஹாசார்யரிடம் 18-தடவை ராமாயணார்த்தங்களை கேட்டருளினார். அந்த அர்த்தங்களுள் புருஷகாரத்தை முன்னிட்டு பகவானை அணுகவேணுமென்பது ஒன்று. ஆதியோடந்தமாக ஆராய்ச்சிசெய்தால் புருஷகாரவைபவம் சொல்லுகிறது என்பது விளங்கும்.



புருஷகாரமாவது, தன்னுடைய அபேக்ஷிதமான பலத்தை ஸாதித்துக்கொடுப்பதற்கு உரிய சேதநனை வசீகரிக்க வேண்டியதற்காக வரிக்கப்பட்ட சேதனனாகும். இதை ஸ்ரீ தேசிகன், ‘ ஸாபேக்ஷனான புருஷனுக்கு அபேக்ஷிதம் தலைக்கட்டிக்கொடுக்கவல்ல சேதநன் அபிமுகனாகைக்கு உபாயமாக வரிக்கப்பட்ட சேதநாந்தரம் ’ என்றருளிச்செய்தார். ஸ்ரீநயினாராசாரியரும், ‘ ஏவம் புருஷகாரஶப்தோ'பி கடகசேதந விஶேஷே லோகப்ரஸித்த்யா ப்ரயுஜ்யத இதி நயிநோர்யாய: ’ (இவ்விதம் புருஷகாரம் என்கிற பதம் அபிமதபலத்தைக் கூட்டிவைக்கிற சேதநவிசேஷத்தினிடத்தில் லோக ப்ரஸித்தியைக்கொண்டு ப்ரயோகிக்கப்படுகிறது) என்றருளிச்செய்தார். ஸ்ரீப்பிள்ளை லோகாசார்யருடைய ஸ்ரீஸூக்தியிலும், கடகத்வமே புருஷகாரத்வமென்று காணப்படுகிறது. இவ்விதமான புருஷகார லக்ஷணம் பிராட்டியிடத்தில் அமைந்திருக்கிறபடியால் அவளை அவ்விதம் வ்யவஹரிக்கத் தட்டில்லை.

சேதநர்களுக்கு இருவர்களோடும் ஸம்பந்த மொத்திருந்தாலும், பகவான் பும்ஸ்த்வப்ரயுக்தமான தண்டதரத்வத்தையுடையவனாகையாலே, அவன் போலன்றியே மாத்ருத்வ ப்ரயுக்த வாத்ஸல்யாதிசயத்தாலே ஹிதபரையாய் தன்னுடைய நிழலில்வைத்து ஈசுவரன்முகம் பெற்றவாறே அவனையாச்ரயிக்கப்பண்ணுகையாலே அவள் புருஷகாரம் அவச்யம். இதை நஞ்சீயர் 'நாளும் நம் திருவுடையடிகள் வணங்கி மாலுமோரிடத்திலும் வணக்கொடு மாள்வது வலமே' யென்று அவனை யாச்ரயிக்குமிடத்தில் பிராட்டியை முன்னிடவேண்டுமென்றருளிச்செய்தார். பிராட்டி தான் புருஷகாரமான விதத்தையும், அதற்கு உபயோக விசேஷங்களான குணங்கள் மூன்றையும் தானே நாட்டாருக்கு தன்னுடைய மூன்று பிரிவுகளால் வெளிப்படுத்தினாள்.

புருஷகாரமாகவேண்டியிருந்தால், அதற்கு இன்றியமையாத குணங்கள் மூன்று. அவையாவன க்ருபையும், பாரதந்த்ர்யமும், அநந்யார்ஹத்வமும்.

இந்த க்ருபைவிஷயத்தில் பக்ஷபேதமுண்டு. ஆனாலும் அவை ஒன்றுக்கொன்று முரண்படா. உடையவர், 'ஸ்வார்த்த நிரபேக்ஷா பரது:க்காஸஹிஷ்ணுதா தயா' என்று ஸ்ரீபாஷ்யத்திலும், 'பரது:க்காஸஹிஷ்ணுதா தயா' என்று கீதாபாஷ்யத்திலும் அருளிச்செய்தார். 'தயா நாம பரது:க்க விஷாதயோ ரக்ஷணேச்சா' என்று பட்டருடைய ஸ்ரீஸூக்தி. 'பரது:க்காஸஹிஷ்ணுதா தயா' என்று சரணாகதிகத்யபாஷ்யத்தில் சொல்லியிருக்கிறது.

ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன், 'ஸ்வார்த்தா விசேஷா பரஹித ப்ரவ்ருத்தி ஹேதுர்குணோ தயா' (தன்னுடைய ப்ரயோஜநத்தை கணிசிக்காமல் பிறருடைய துயரத்தை நீக்கவேணுமென்கிற விச்சை தயை) யென்று அருளிச்செய்திருக்கிறார். பிறருடைய துக்கங்கண்டு பொறாமையாகிற குணமிருந்தாலொழிய அவர்களுடைய துயரத்தை நீக்கவேணும் என்று இச்சை யுண்டாகாதாகையினால் அதையும் சேர்த்து கிருபையாக அருளிச்செய்தாராகையால், 'ஸ்வார்த்த நிரபேக்ஷா பரது:க்க நிராகரணேச்சா' என்கிற விடங்களிலும் இவ்விதமான அர்த்தங்கொள்ளுவதில் ஒரு பக்ஷத்துக்கும் விரோதமில்லையென்பது தேசிகன் திருவுள்ளம். பாரதந்த்ர்யமாவது பராதீநத்வம், பிறருக்கு (பகவானுக்கு) வசப்பட்டிருப்பது, இவ்விடத்தில் எப்பொழுதும் உட்பட்டிருப்பது என்று பொருளாகும்.



அநந்யார்ஹத்வம் என்றால் பகவானை யொழிந்த மற்ற வஸ்துக்களுக்கு உரிமையல்லாதகுணம். இம் மூன்று குணங்களும் புருஷகாரம் செய்வதில் உபயோக முள்ளவை யாகின்றன. ஜீவராசிகள் ஸம்ஸாரத்திற் படுகிற துக்கத்தைப்பார்த்து இவர்களைப் பகவானோடே சேர்த்து விடுகைக்கு அந்தச் சேதநர்களுடைய துக்கத்தைப் போக்கடிக்கவேணுமென்கிற கிருபை அவச்யம். ஸர்வேச்வரனான பகவான் ஸ்வதந்திரன், அவனை வசீகரிக்கவேண்டில் அவன் மனம் போன்ற பிரகாரம் நடந்து அவனைத் தன்வழி திருப்புகைக்குப் பாரதந்த்ர்யம் மிக அவச்யம்.

'பகவானாகிற நமக்கே உரியவளாய் மற்றொரு வஸ்துவுக்கு உரியவளன்றிக்கே யிருக்கிறவிவள் நம்முடைய ப்ரயோஜநமன்றோ சொல்லுகிறாள்' என்று அவள் சொல்வதை ஆதரவுடன் அங்கீகரித்து அவளிஷ்டப்படி செய்வதற்கு உறுப்பான குணமாகையினால் ப்ரதாநமாயிருக்கும் அநந்யார்ஹத்வம் முக்கியம். இம் மூன்று குணங்களையும் பிராட்டி மூன்று பிரிவுகளால் வெளியிட்டாள். இந்த மூன்று பிரிவுகளுக்குத்தான் விச்லேஷத்ரயமென்று வ்யவஹாரம்.

## க்ருபையை வெளியிட்ட விதம்.

ஸர்வேச்வரனான பகவானுடைய ஒவ்வொரு அவதாரத்திலும் அந்தப்பகவானுக்குத்தகுந்தபடி, 'தேவத்வே தேவதேஹேயம் மனுஷ்யத்வே ச மாநுஷீ। விஷ்ணோர்தேஹாநுரூபாம் வை கரோத்யேஷாத்மநஸ்தநும்' (பகவான் தேவசரீரத்தை அடைந்தால் தான் தேவசரீரத்தை அடைகிறாள். மனுஷ்யசரீரத்தை பரிக்ரஹித்தால் தானும் மனுஷ்யசரீரத்தை அடைகிறாள். இப்படி பகவானுடைய திவ்யமங்கள விக்கிரஹத்துக்கனுகுணமாகச் சரீரமெடுக்கிறாள்) என்று சொல்லப்பட்டிருக்கும் பிரகாரம் பகவானுடைய அந்தந்த அவதாரத்திற்குத் தகுதியான விக்ரஹங்களைக் கொள்ளுகிறாளென்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப் பகவான் துஷ்டநிக்ரஹம், சிஷ்டபரிபாலநம், சரணாகத ரக்ஷணம், இவை முதலிய தர்மங்களையநுஷ்டித்துக் காட்டுவதற்காகச் சக்ரவர்த்தித் திருமகனாய் அவதரிக்கும் காலத்தில் தானும் 'ஸஹதர்மசரீ தவ' என்று சொல்லுகிறபிரகாரம் அந்தப்பகவானோடு அந்த தர்மங்களை அநுஷ்டித்துக் காட்டுவதற்காக ஜநககுல ஸுந்தரியாய் அவதரித்து சக்ரவர்த்தித்திருமகனுடன் தண்டகாரண்யத்தில் எழுந்தருளினாள். அப்பொழுது துராத்மாவான ராவ

ணன் பிரித்தானென்கிற வ்யாஜத்தினாலே தான் சிறையிலிருந்தாள் ஸ்தந்யப்ரஜை கிணற்றில் விழுந்தால் தானும் கூடக்குதித்தெடுக்கும் தாயைப் போலே தேவஸ்த்ரீகளைச் சிறையினின்று விடுவிப்பதற்குத் தானும் சிறையிருந்து தயாகுணத்தை வெளியிட்டாள். அப்பொழுது தன் ஸமீபத்திலிருந்து அல்லும் பகலும் துன்பத்தை விளைத்துக்கொண்டிருக்கிற எழுநூறு ராக்ஷஸிகளையும், த்ரிஜடை ஸ்ரீராமனை ஜயமுள்ளவனாயும் ராவணனை பராஜிதனாகவும் ஸ்வப்நம்கண்ட வ்ருத்தாந்தத்தாலே ஸந்தோஷித்து த்ரிஜடையின் சரணாகதியில் அந்தர்பூதைகளாக்கி அபய ப்ரதாநம் செய்தருளினாள். ‘சுரிகுழல் கனிவாயா’ன திருமகளான தன்னைப் பிரித்த கொடுமையுள்ளவனான ராவணன் நேரில் தன்னைப்பார்த்து ‘ஹா ராகவ’ என்பதுபோன்ற சில பருஷமான வார்த்தைகளைச்சொல்ல அவனிடத்தில் கிருபையுள்ளவளாய், ‘இஹ ஸந்தோ ந வா ஸந்தி’ என்று இவ்வூரில் பெரியோர்களில்லையோ என்று சொல்லி நொந்துகொண்டு, ‘மித்ரமௌபயிகம் கர்த்தும் ராம: ஸ்தாநம் பரீப்ஸதா। வதம் சாநிச்சதா கோரம் த்வயாஸௌ புருஷர்ஷப: ॥’ (ஏ, ராவணா! நீலங்கையில் வஸிக்க விரும்பினாயாகிலும், கோரமான வதத்தை அடையாமலிருக்க வேண்டினாயாகிலும் புருஷோத்தமனான ஸ்ரீராகவனிடத்தில் ஸ்நேஹம் செய்துகொள்) என்று, தன்னுடைய காதனை இவனுக்கு ஸமம்போலசொல்லி, அவனுடைய துர்தசையிலிருந்து மீட்பதற்கு ஸ்நேஹம் அமையுமென்று உபதேசித்தாள். ‘விதித: ஸ ஹி தர்மஜ்ஞ: சரணாகதவத்ஸல: । தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி ॥’ (அவர் சரணாகத ரக்ஷணதர்மத்தை நன்றாயறிந்தவர், சரணாகதர்களிடத்தில் வத்ஸலர் என்று, சத்ருகோஷ்டியிலும், ப்ரஸித்தராயிருக்கிறவர். ஆகையால் நீ உயிருடன்வாழ வேண்டியிருந்தால் அந்தப் பகவானுடன் ஸ்நேஹம் பண்ணவமையும்) என்று சரணாகதி சப்தம் ப்ரயோகிக்க வேண்டியவிடத்தில் மைத்ரீ சப்தம் ப்ரயோகித்தாள். சரணாகதியைச் செய்யென்றால் அது தன்னை நிஹீநமாய் நினைப்பான் என்று எண்ணி அவனை பகவானுக்குரியவனைப்போல் ‘மைத்ரீ பவது’ என்றாள். காலில் விழுந்தவனைத் தாழ்வாக நினைக்காத ஸ்வபாவமுள்ளவளாகையாலேயாவது ‘மைத்ரீ பவது’ என்றருளிச்செய்தாளாகவுமாம். சக்ரவர்த்தித் திருமகனும் சரணாகதர்களைப் புல்லியவராக நினைக்கமாட்டாமல் ‘விஹாவேந ஸம்ஹார வ்ய’ என்றிறேயருளிச்செய்தது! அதுபோல் இவளும் இப்படி அருளிச்செய்தாள்.

(இன்னும் வரும்.)

காடந்தேத்தி வெ. கோபாலாசார்யர்



॥ ஸ்ரீ: ॥

## திருவஹீந்திரபுரம் ஸ்ரீவேதாந்த தேசிகன் ஸபையின் இரண்டாவது வார்ஷிக மஹோத்ஸவத்தின் நடவடிக்கைகள்.

ஏற்கனவே தீபிகையில் ப்ரசுரமாயிருந்தபடியே சென்ற புரட்டாசியீ 11உ (27-9-22) துடங்கி திருவஹீந்த்ரபுரத்தில் ஸ்ரீதேசிகன் திருமாளிகையில் ஸ்ரீதேசிகன் திவ்யோத்ஸவத்தில் ஷை ஸபையின் இரண்டாவது வருஷ உத்ஸவம் ஆரம்பிக்கப்பட்டது. ஸேவார்த்திகளாயும் ஸபையின் சார்பாகவும் அநேக பாகவதர்கள் எழுந்தருளியிருந்து ‘வாசா தர்மமவாப்நுஹி’ (வாக்கினால் கைங்கர்யம்செய்து தர்மத்தையடை) என்பதற்கேற்ப அத்யயந வேதபாராயண கைங்கர்யங்களில் குதூஹலத்துடன் அன்வயித்தார்கள். உத்ஸவம் வெகு விமர்சையாய் நடந்தேறியது.

ஆறாவது உத்ஸவத்தன்று அநேக வித்வான்களுடனும் வித்யார்த்திகளுடனும் மஹாஜநங்களுடனும் ஷை ஸபையின் நடவடிக்கை துடக்கமாயிற்று. அக்ராஸநம் வஹிக்க ப்ரார்த்திக்கப்பட்டிருந்த சென்னை ஹைகோர்ட்டு வக்கீல், ஸ்ரீ. உ. வே. வி. வி. ஸ்ரீநிவாஸையங்கார் அன்று எழுந்தருளாததால், ஷை ஸபையின் அத்யக்ஷராகிய President வித்வான் சேட்டலூர் பூகவத்விஷயம் ஸ்ரீ. உ. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியே அக்ராஸநத்திலெழுந்தருளியிருந்தார். சில வித்யார்த்திகளின் பரீக்ஷை நடந்தது. அதன் பிறகு ஸ்ரீ. உ. வே. சேட்டலூர் ஸுந்தரராகவாசார்யர், பி. ஏ, ஸ்ரீதேசிகனுடைய ஸ்ரீயாதவாப்யுதயம் என்னும் காவ்யத்தை விமர்சித்து எழுதியிருந்த வ்யாஸத்தைப்படித்தார். அதில் அநேக ச்லோகங்களை எடுத்து விவரித்து அவற்றைக் காளிதாஸாதி க்ரந்தங்களுடன் சீர்தூக்கி ஸ்ரீதேசிகன் க்ரந்தத்தின் குணாதிக்யங்களையும் அலங்கார ரஸ விசேஷங்களையும், அதில் ப்ரதிபாதிக்கப்படும் புருஷார்த்த விசேஷத்தையும் தெளிவாக எடுத்துரைத்தார். அத்துடன் அன்று ஸபை கலைந்தது.

ஏழாவது உத்ஸவதினமாகிய மறுநாள் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி எழுந்தருளிவிட்டபடியால், உத்தேசித்தபடியே அவர் அக்ராஸநத்தின் கீழ் காலை 9-மணிக்கே மீண்டும் ஸபை கூடிற்று. அன்று சென்னை ஸ்ரீ. உ. வே. வி. தேசிகாசார்யர் ஸ்வாமி முதலிய லௌகிக ப்ரமுகர்களும்

ஸ்ரீ. உ. வே. பட்டராசார்யர், ஸ்ரீ. உ. வே. வி. அநந்தாசார்யர் முதலிய வித்வான்களும் மற்றும் பலரும் ஸபையை யலங்கரித்தனர். அக்ராஸநாதிபதி ஆரம்பத்தில் 'ஸ்ரீதேசிகனுடைய விபவம் எங்கும் விளங்கவேண்டியது அவச்யமேயாயினும், இத்திவ்யதேசத்துக்கு அது இன்றியமையாதது. ஏனெனில் தெஶிகஸ்ய தெஶிகத்வம் (தேசிகன் தேசிகனானது) இவ்வூரிலானபடியால் அளவிறந்த வர்ஷங்கள் ஸ்வாமி எழுந்தருளியிருந்த திருமாளிகையும், அவருடைய திருக்கைகளினால் நிர்மாணம் பண்ணப்பட்ட திருக்கிணறும் யாவரும் உஜ்ஜீவிக்கும்படியாக இங்கு காப்பாற்றப்பட்டு வருகிறது. ஆதலால் இந்த ஸபையில் அக்ராஸநம் வஹிக்கும் கைங்கர்யத்தை ஒருவரும் வெறுக்கமாட்டார்கள். பாகவதர்கள் நியமித்ததினால் அதை இன்னும் ஆதரவுடன் வஹிக்க ஸித்தமாயிருக்கிறேன்' என்று மொழிந்து தமது ஆஸநத்திலமர்ந்தார். பின்னர் வித்யார்த்திகள் ஸ்ரீதேசிகன் க்ரந்தங்களிற் பலவற்றில் பரீக்ஷிக்கப்பட்டார்கள். பரீக்ஷை முடிந்ததும் ஸ்ரீ. உ. வே. நெடுந்தெரு ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி 'ஸ்ரீஸ்துதியை'ப்பற்றி உபந்யாஸித்து அதிலுள்ள அர்த்தவிசேஷங்களையும் பாவவிசேஷங்களையும் விளக்கிக்காட்டினார். பிறகு அன்று ஸதஸ்ஸு முடிந்தது.

மறுநாள் பகல் 2-மணிக்கு மீண்டும் ஸபை கூடிற்று. அன்று அதிகரணஸாராவளி ந்யாயஸித்தாஞ்ஜநம் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம், ஸங்கல்பஸூர்யோதயம், யாதவாப்யுதயம் என்னும் க்ரந்தங்களில் பரீக்ஷைகள் நடைபெற்றன. அநேக வித்யார்த்திகள் அந்வயித்தார்கள். அநந்தரம், அக்ராஸநாதிபதியின் வேண்டுகோளுக்கிணங்கி வித்வான் ஸ்ரீ. உ. வே. சேட்டலூர் நரஸிம்மாசார்யர் ஸ்வாமி 'ஸ்ரீதேசிகஸ்ய தேசிகத்வம்' என்னும் விஷயத்தைப்பற்றி, ஸப்யர்களுடைய மனதைக்கவரும்படி வெகு இனிய உபந்யாஸமொன்றைப் பொழிந்தார். அது தனியாக ப்ரசுரத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. (மற்றோர் பக்கம் பார்க்க—பத்திராதிபர்.) இது முடிந்ததும், தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. உ. வே. குப்புஸாமி அய்யங்கார் ஸ்வாமி ஸ்ரீதேசிகப்ரபந்தத்தினுடைய மேன்மையையும், அதில் 24-ப்ரபந்தங்களடங்கியிருக்கும் ப்ரகாரத்தையும், அவற்றிலுள்ள விஷயங்களின் ஸாரங்களையும் சுருக்கி விளக்கிய தமது வ்யாஸமொன்றைப் படித்தபிறகு ஸபை கலைந்தது.

நான்காவது தினமாகிய 9-வது உத்ஸவத்தில் பகல் 2-மணிக்கு ஸபை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் வெகு சிறுபிள்ளைகள் ஸுமார் 30-பெயர்கள் ஸ்தோத்ரபாடங்களில் பரீக்ஷை செய்யப்பட்டார்கள். அவர்களு



டைய உத்ஸாஹத்தையும் புத்திசாலித்தனத்தையும் மிகவும் மெச்சி அக்ராஸநாதிபதியே அவரவர்க்குத்தக்கபடி ஸம்மாநம்செய்து அவர்களை ஆநந்திப்பித்தார். பிறகு இஸ்ஸபையின் ஆதரவில் நடந்துவரும் ஸ்ரீதேசிகன் பாடசாலை மாணவர்கள் யாதவாப்யுதயத்தில் பரீக்ஷிக்கப்பட்டார்கள். இதோடு இக்கார்யங்கள் முடிவுபெற்றன.

பின்னர் பண்டிதர்களுக்கும் வித்யார்த்திகளுக்கும் ஸம்மாநங்கள் செய்ய உபக்ரமிக்கப்பட்டது. முதலில், அத்திருமாளிகையில் உத்ஸவார்த்தமாக எழுந்தருளி ஸேவை ஸாதித்துக்கொண்டிருந்த ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனுக்கு விலையுயர்ந்த பட்டு ஒன்று ஸம்பாவனைசெய்து ஸமர்ப்பிக்கப்பட்டது. ஸம்மாநங்களின் முதலில், ஏற்கனவே விளம்பரம் செய்திருந்த ப்ரகாரம், ஸ்ரீதேசிகனுடைய மும்மணிக்கோவை, நவரத்நமாலை இவைகளுக்கு வ்யாக்யானமும், ஸ்ரீதேசிகன் ஸம்ப்ரதாயத்தை யநுஸரித்து 'தத்க்ரதுந்யாய நிர்ணயம,' 'ஸ்ரீதேசிகாஶயப்ரகாசம்,' என்னும் க்ரந்தங்களையும் ஸபைக்கு எழுதியனுப்பியிருந்தவராயும், அப்படி மற்றைய ஸ்வாமிகளால் எழுதி அனுப்பப்பட்டிருந்த வ்யாக்யானங்களில் ஸபையின் அதிகாரிகளால் உத்தமமென்று நிர்ணயிக்கப்பட்டவருமான வித்வான் சேட்டலூர் ஸ்ரீ. உ. வே. நரஸிம்மாசார்யஸ்வாமிக்கு, தங்கவீரசங்கிலியை ஸமர்ப்பிக்கும்போது அக்ராஸநாதிபதி எழுந்து 'ஸுமார் 15-வருஷகாலமாய்ச் சென்னையில் பஹுஜனங்களுக்கு எளிதில் தெரியும்படி ஸம்ப்ரதாய விஷயங்களை உபந்யஸித்தும், ஸர்வ வேதாந்தஸாரமாய் நம் ஸம்ப்ரதாயத்துக்கு இன்றியமையாததுமான ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்துக்கும் சில்லரை ரஹஸ்யங்களிற் பலவற்றிற்கும் என்னைப்போன்றவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி எளிய தமிழ் நடையில் வ்யாக்யாநம் செய்தும், கீதாபாஷ்யம், தாத்பர்ய சந்திரிகை, கத்யத்ரயபாஷ்யம், சதுச்லோகீ பாஷ்யம், ஸ்தோத்ர பாஷ்யம் முதலியவைகளைத் தமிழில் மொழிபெயர்த்தும் இப்படிப்பலமுகங்களாக நமது ஸித்தாந்தத்தை வளரச்செய்துகொண்டு வருகிற இந்தஸ்வாமி விஷயத்தில் நாம் க்ருதஜ்ஞதை பாராட்டுவதற்கு இது அடையாளமாகுமேயன்றி, இதை ஸம்மானம் என்பது கூடாது. ஆயினும் இதை இந்த ஸ்வாமிக்கு ஸமர்ப்பிக்கும்படியான பாக்யத்தைப்பண்ணினேன் என்பதைப் பற்றி ஸந்தோஷிக்கிறேன். நமது ஸம்ப்ரதாயம் பாஷை முதலியவைகளின் பெருமை அறியத்திறமில்லாத அந்யர்களிடம் இப்பேர்பட்ட ஸ்வாமிகள் பிருது முதலியவைகளைப் பெறுவதில் ஒரு விசேஷமுமில்லை. இந்த ஸந்நிதியில் பாகவதர்களால் அளிக்கப்படும் பிருதுகள்தான் ச்லாக்யமானவை. இந்த சம்

கிலி பண்டிதர்களே அணியக்கூடியதாகையால் இதற்குப் பண்டித பூஷண மென்னும் பெயர் தகும். இதை அணியும் வித்வான்களும் பண்டிதபூஷண ரென்னும் பிருதை வஹிக்கத்தக்கவர். ஆகையால் இந்த ஸ்வாமிக்கு பண்டித பூஷணரென்னும் பிருதையும் இந்த மஹாஸபையின் ப்ரதிநிதியாக ஸமர்ப்பிக்கிறேன்' என்று சொல்லி வீரசங்கிலியை அந்த ஸ்வாமியின் கையில் போட்டுவைத்தார். இவற்றையெல்லாம் ஸபையோர் கரகோஷத்துடன் ஆமோதித்தார்கள். இப்படி வர்ஷந்தோறும் ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயத்தில் விசேஷ வ்யாக்யாநங்களையும் விசேஷார்தங்களையும் ப்ரகாசப்படுத்தி பரிச்ரமப்படும் பண்டிதர்களுக்கு இம்மாதிரியான பூஷணமும் பட்டமும் ஸம்மானிக்கப்படும் என்றும் அக்ராஸனாதிபதி அறிவித்தார். ஸ்ரீதேசிகன் திவ்ய சரித்ரத்தை ஸங்கீதத்துடன் சேட்டலூர் ஸ்வாமியிடம் தாம் கேட்டு ஆநந்தித்தபடியே எல்லோரும் கேட்டு க்ருதார்த்தராக வேண்டுமென்கிற தம் அபிநிவேசத்தையும் வெளியிட்டார்.

பின்னர் வித்வான்களுக்கும் மாணவகர்களுக்கும் யதார்ஹம் ஸம்மானங்கள் செய்யப்பட்டன. ஸபையை சட்டப்படி ரிஜிஸ்தர் செய்வித்து உசிதமான சட்டங்களையும் கூடிய சிக்கிறத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது. கடைசியாக அக்ராஸநருக்கும் வித்வான்களுக்கும் ஸபையோர்களுக்கும் வந்தந புரஸ்ஸரமாக ஸபையின் இவ்வர்ஷத்திய நடவடிக்கைகள் முடிவு பெற்றன. சதாவதானம், அ வேதாந்தசார்யர்,

காார்யதர்சி.

ஸ்ரீ:

கோலாப்பூர்

## ஸ்ரீ. உ.ப. எம். ஆர். ஸ்ரீனிவாஸய்யங்காருடைய பண்டிதன்

## உபந்யாஸ விவரம்.

---

[ஆவணிமீ 15வ ஷை தாலுக்கா பூவலம்பாடி கிராமத்தில் நடந்த 'லக்ஷ்மீ' விஷயமான உபந்யாஸத்தின் சுருக்கம்.]

முதலில் ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த விஷயமாயும், ஸபைவிஷயமாயும் உபன்யஸித்துவிட்டு எல்லாப்பதத்திலும் மேலான பதம் வைகுண்டம் என்



பதையும், அதை அடைவதற்கு பக்திதான் ஏற்றஸாதநமென்பதையும், பக்தி ஸ்வரூபத்தையும் அதற்கு ஸாதநங்களான யஜ்ஞதபோதானயாகாதிகளின் ஸ்வரூபங்களையும், ஒவ்வொரு நிலைமைகளையும், அதை ஸம்பாதிப்பதிலுள்ள ச்ரமங்களையும் த்யாநத்திலுள்ள ஸுகத்தையும், [illegible] விக்ரஹத்தின் வர்ணாகாரத்தையும், அவதாரத்தின் ஏற்றத்தையும், அதில் ஆழ்வார்களின் ஈடுபாட்டையும், அவர்கள் ஸ்ரீஸூக்திகளான தமிழ்வேதத்தின் பெருமையையும் எடுத்து நன்றாக நிரூபிக்கப்பட்டது.

[ஆவணிமீ 16வ ஷையூரில் மாலை 3-மணிக்குமேல் நடந்த 'ப்ரபத்தி' விஷயமான உபந்யாஸத்தின் சுருக்கம்.]

பக்தியென்பது உபாயதசையிலேயே பரமஸுகமாயிருந்தாலும் அதை அனுஷ்டிக்க எல்லாருக்கும் அதிகாரமில்லாமையாலும் அதிகாரமுண்டானாலும் நினைத்தபோது பலத்தைக்கொடுக்கமையாலும், ஆழ்வார்நாதமுனிகள் முதலானவர்கள் தங்களுக்கு அதிகாரமிருந்தும் இத்தையவலம்பித்திருப்பதாலும், ப்ரபத்தியே நமக்கு ஏற்ற ஸாதநம் என்பதையும், இதற்கு வேண்டிய அதிகாரம் அங்கம் முதலியவைகளையும் சொல்லிவிட்டு ப்ரபந்நராய்ப் போந்தவர்க ளின்னார்க ளென்பதையும், அவர்களின் சரித்திரத்தையும் அவர்கள் 'செய்த வேள்வியன்,' நாநாவித ப்ரயித யொம லக்ஷண காலோநாயநிதலவு மதகொபிதஜாமா கஞ்சா' என்றிருக்கும் ஏற்றத்தையும் இம்மார்க்கத்தை ஸ்ரீபாஷ்யகாரர் ரஹஸ்யத்தால் நடத்திக்காட்டியிருக்கிறாரென்பதையும், நமது நிகமாந்த தேசிகனால் விஸ்தரிக்கப்பட்டு நாளது வரையில் நம்முடைய ஆசார்யரால் இம்மார்க்கம் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிற தென்பதையும் ச்ரத்தாவேசத்துடன் உபன்யஸிக்க ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்திலும் தேசிகன் திருவடிகளிலும் பக்தியுள்ள பிராம்மண விசுவாசிகளான ரெட்டிமார்கள் அடிக்கடி இம்மாதிரி உபன்யாஸங்களை கேட்கும்படி செய்விக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள்.

[ஆவணிமீ 18வ பிரம்பஹூரில் நடந்த 'பக்திமார்க்கம்' என்னும் உபன்யாஸத்தின் சுருக்கம்.]

முதலில் ஸபை விஷயமாய் சொல்லி, பக்தியின் ஸ்வரூபம், அதிகாரம், முதலியன இன்ன தென்பதையும், அதை அடைவதற்கு வேண்டியதை நிரு

பிக்குங்கால் ஜ்ஞானஜய ஐச்வர்ய நிரூபணங்களின் ஆவச்யகத்தையும், ஸவ ரூபத வரித்ருத்தையும், யோகத்தின் ப்ரகாரத்தையும், வர்ணாச்ரம தர்மங்களை நழுவவிடக்கூடாதென்பதையும் இது விஷயமாய் தற்சமயம் சில நிபுணர்களின் எண்ணத்தையும், அதினால் உண்டாகியும் உண்டாகப்போகும் அனர்த்தங்களையும் யுக்தி ப்ரமாண பூர்வகமாய் வற்புறுத்திச்சொல்லி மேல் பக்தியின் பெருமையையும், அதின் அங்கஸஹிதமான யமம் என்பதின் பகுதி அஹிம்ஸா ஸத்யாதிகளை ஸம்பாதிப்பதுகூட நம்மால் ஆகாமலிருக்கிறதையும், ப்ரஹ்லாதாதிகளுக்கு ஐந்நஸித்தமாயிருந்ததென்பதையும் நிரூபித்து கோபிகளுக்கு கண்ணனிடத்தில் இருந்த ப்ரீதியையும், அவர்கள் விஷயத்தின் அவனிருந்த இருப்பையும் ஸ்ரீபாகவத ச்லோகங்கள், ஆழ்வார் ஸ்ரீஸூக்திகள், இதுகளை கொண்டு நிரூபிக்கப்பட்டது.

[ஆவணிமீ 19உ ஷையூரில் நடந்த 'ப்ரபத்தி' விஷயமான உபந்யாஸத்தின் சுருக்கம்.]

பக்தியோகத்தின் துஷ்கரத்தை நிரூபித்து அதினால்தான் 'ஜ்ஞாந ப்ரயாஸ தேவாஸ்ய நஞ்சனவ' 'என்றும் பட்டப்ரபத்யாசார்ய ப்ரஹ்ம வடிவாக ப்ரபத்ஸ்தாஃ நஞ்சலாம்' என்றும் சொல்லுகிறபடி ப்ரபத்தியையே மஹான்கள் விரும்பியிருக்கிறார்கள் என்பதையும், அதின் ஸ்வரூபம் அங்கம் முதலியவைகளையும், அதுகளில் அதிகாரமாயும் அங்கமாயுமிருக்கிற மஹாவிச்வாஸம் உண்டாவதற்கு ப்ரதிபந்தகமாயுள்ள சங்கைகளையும், அதற்கு பரிஹாரங்களையும், அது தெளிவதற்கு ஸாதனம் ஸதாசார்ய கடாக்ஷ விசேஷம்தான் என்பதையும் சொல்லிவிபீஷண சரணாகதி இதற்கு நிரூபகமாக உபன்யஸிக்கப்பட்டது. 4-மணி காலம் நடந்த இதைக்கேட்டு மகிழாதவர்களில்லை.

[ஆவணிமீ 20உ ஷையூரில் நடந்த 'ப்ரபத்தி' யின் தொடர்ச்சி விஷயமான உபந்யாஸத்தின் சுருக்கம்.]

ப்ரபத்திமார்க்கம்தான் இக்காலத்துக்கேற்றதென்பதையும், அதில் விச்வாஸம் உண்டாவதற்கு ஸத்ஸம்பந்தி ஸத்கர்ம ச்ரவணாதிகளைச்செய்து வேண்டுமென்றும், ஸதாசார்யனை ஆச்ரயித்து ஸதுபதேசங்களைப்பெற்று தத்வ ஜ்ஞானத்தை சம்பாதித்து 'பராமர்தனி' என்கிற விதமாய் இதரங்களில் விரக்தி



யையும் மோக்ஷப்ராப்தியையும் பெறவேண்டுமென்பதையும், இன்னும் அநேக விஷயத்தையும் ருக்மணிதேவியின் சரணாகதி ரூபமான ருக்மணிகல்யாண கதையை ப்ரஸங்கிக்கப்பட்டது.

ஆவணிமீ 12உ பிரம்பலூர்தாலுக்கா காரையென்னும் கிராமத்தில் 'ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம்' விஷயமாய் நடந்த உபந்யாஸத்தின் சுருக்கம்.

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தின் மேன்மை முதலியவைகளையும் அதற்காக ஏற்பட்டிருக்கும் சபையின் நோக்கம் முதலியதுகளையும் சொல்லிவிட்டு அநாதி குணமான காமக்ரோதாதிகளின் தொந்தரவுகளையும், அதை ஒழிக்க உபாயத்தையும், வைராக்யத்திலுள்ள சுகத்தையும், சந்தோஷமே சாதுக்களுக்கு ஆகாரமென்பதையும், அது யாருக்கும் இல்லாமலிருப்பதற்கு பேராசைதான் ப்ரதிபந்தகமென்பதையும், ஸத்ஸங்கத்தின் வைபவத்தையும் விஸ்தாரமாய் எடுத்துச்சொல்லப்பட்டது. அந்த ஊரில் ஸம்ஸ்க்ருதம் முதலியதை நன்றாய்க்கற்று வேதாந்தவாஸனையும் உள்ள ரெட்டி ஒருத்தர் மிகவும் விஸ்மயித்தார்.

ஆவணிமீ 22உ ஸ்ரீரங்கத்தைச்சேர்ந்த மேலூரில் பெரியாண்டவன்.
டில்லி. ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸய்யங்கார் கைங்கர்யம்.

தற்சமயம் ஸ்ரீமதாண்டவன் ஸம்ப்ரதாயத்தில் ஸ்ரீஸந்நிதி ப்ரவர்த்தகராய் விளங்கும் தேரெழுந்தூர்ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமிகளின் திருநக்ஷத்ர தினத்தன்று ஆவணிமீ 22உ ஸேவார்த்தமாய் எழுந்தருளியிருந்த நூற்றுக்கணக்கான ஸ்வாமிகளின் கோஷ்டியில் ஸ்ரீமதாண்டவன் பரமகிருபையால் ஸ்ரீ. உப. டில்லி. ஸ்ரீனிவாஸ ஐயங்கார் ஸ்வாமி பண்டின் கைங்கர்யமாய் சென்னை ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த ஸபையாரால் பிரசுரிக்கப்பட்டிருக்கும் பத்திரிகையை ஒவ்வொருவருக்கும் அனுக்ரஹித்துக்கொடுத்து, அதில் எழுதியிருப்பவைகளை மிகவும் ப்ரசம்ஸித்து ஒவ்வொரு விஷயத்தையும் ஸாநுபவத்துடன் உருக்கமாய் 2-மணிகாலம் திருவாய் மலர்ந்தருளி, ஸ்ரீவைஷ்ணவ தர்சனத்தை முன்னுக்கு கொண்டுவர ப்ரயத்னத்தை எல்லாரும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி நியமித்தருளினர். மறுதினம்காலையில் அதே ஆச்ரமத்தில் ஆஸ்திக ஸ்ரீவைஷ்ணவர்களின் முன்

பு 'ஸதாசார்ய ஸம்பந்தத்தின் பெருமை' யைப்பற்றி 1½-மணி காலம் ஒரு உபந்யாஸம் செய்யப்பட்டது.

நெடுந்தெரு — ஸ்ரீநிவாஸாசார்யர்.

(நமது ஸபையின் ப்ரயத்னங்களில் திருவுள்ளம் பற்றி இப்படி அனுக்ரஹித்த ஸ்ரீ ஸ்வாமிக்கு ஸபையின் க்ருதஜ்ஞதையை விநயத்துடன் அறிவித்துக்கொள்ளுகிறோம்—பத்திராதிபர்.)

## கடிதங்கள்.

ஸ்ரீவேதாந்ததீபிகை பத்திராசிரியருக்கு விஜ்ஞாபனம்.

ஸ்ரீவைஷ்ணவர்களில் உபயகலையாருக்கும் அப்போதைக்கப்போது ஏற்படும் விரோதங்களும் அவைகளினால் உண்டாகும் பணச்சிலவு முதலான கெடுதல்கள் இம்மாதம் வேதாந்ததீபிகை வாசிக்கும் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இந்த விஷயங்களில் ஏற்படும் கோர்ட்டுச் சிலவு முதலானதுகளை நிறுத்திவிட்டால் ஸ்ரீவைஷ்ணவர்களில் ஏழையாயிருக்கிறவர்களுக்கு எவ்வளவோ உபகாரம் செய்யலாம். இதுவிஷயத்தில் சிலமுக்கியமான ஸ்ரீவைஷ்ணவர்கள் பிரஸங்கங்களைச்செய்வதும் ஸஞ்சிகைகளில் எழுதுவதும் மாத்திரம் உபயோகமில்லை. இது விஷயத்தில் தேவரீர் தீபிகைமூலமாக உடனே என்னகாரியம் செய்யவேணும் என்று எழுதக்கூடிய சீக்கிரத்தில் முடிவு செய்யவேணும். அடியேனுடைய அபிப்பிராயத்தில் சாச்வதமாக நாலு ஸ்வாமிகளை பஞ்சாயத்துதாரர்களாக ஏற்படுத்தவேண்டும். அதில் இரண்டுபேர் தென்கலைஸ்வாமிகளாகவும், இரண்டுபேர் வடகலை ஸ்வாமிகளாகவும் இருக்க வேண்டும். எந்த இடத்திலானாலும் இரண்டு கலைகளுக்குள்ளும் வ்யவகாரம் ஏற்பட்டால் அங்கே உள்ள சுவாமிகளில் முக்கியமானவர்களாக ஒருதென்கலைஸ்வாமியையும் ஒரு வடகலைஸ்வாமியையும் பஞ்சாயத்துதாரர்களாக சேர்த்துகொண்டு ஆறு சுவாமிகளாக சேர்ந்து அந்த வ்யவஹாரத்தை எப்படியாவது முடிக்கவேணும். அப்படி முடிக்கக்கூடாவிட்டால் அதற்காக நமது சபைக்கு அவர்கள் அபராதம் கொடுக்கவேண்டும். இந்த சங்கதியை நமது சபையில் அடுத்தாப்போல் கூட்டப்படும் மகாசபையில் யோசித்து முடிவுசெய்யவேண்டும். இந்த மாதிரி ஒரு பெருங்காரியத்தைச்செய்து விட்டால் நம்முடைய ஸபை இருப்பதற்கு ஸாபல்யம் ஆனதாகும். இதுமாதிரி அரும்பெருங்காரியங்களைச் செய்யாவிட்டால் நம்ம ஸபை இருந்துதான் என்ன ப்ரயோஜனம்? இந்த ஸங்கதியைப்பற்றி ஸபையின் முக்கியமான உத்யோகஸ்தர்களும் மற்றப்பெரியவர்களும் தீர யோஜனைசெய்து முடிப்பார்கள் என்று நம்பத்துணிகிறேன்.

கோயமுத்தூர்,<br>துந்துபி ஸ்ரீ புரட்டாசி மீ<br>28௳ } சி. வி வெங்கடதாஸன்.

186720 சென்னை-600 00

ஸ்ரீ:.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

## * ஸ்ரீதேசிகஸ்ய தேசிகத்வம்.

(ஸ்ரீதேசிகன் தேசிகனானது.)

உலகத்தில் ஜநித்த மனிதரெல்லாம் ஹிதத்தை நாடவேண்டியது அவசியம். அதற்கு ஆசார்யனை யடைவதைவிட வேறு மார்க்கமில்லை என்பது ச்ருதியிலும், அதை யனுஸரித்த 'ஸாக்ஷாத் க்ஷத்ரபந்துர்வா வர்ணகீம்ஸு வர்ணேஷு ஸு । ஆசார்ய வத்தயாத்மகே', 'துன்பற்ற மதுரகவி தோன்றக்காட்டும் தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே' இத்யாதி ஆசார்யாதி ஸ்ரீஸூக்திகளிலும் ப்ரஸித்தம். அப்படித்தேடும்போது ஆசார்ய லக்ஷணங்கள் பொருந்தினவனையே தேடவேண்டும் என்பதும், 'யதா நாவாஶ்ரிதஸ்ஸர்வ: யதாவாரம் நமஹதி । ஜ்ஞாநாஹீநம் குரும் ப்ராப்ய கதம் மோக்ஷம் ஸமஹதி' ॥' (உடைந்த ஓடத்திலேறினவன் எப்படி அக்கரைச் செல்லமாட்டானோ அப்படியே ஜ்ஞாநமில்லாத ஆசார்யனை யடைந்தவன் மோக்ஷத்தை யடையமாட்டான்) என்று நிஷ்கர்ஷிக்கப்பட்டது. ச்ருதியிலும் 'ஶ்ரோத்ரியம், ப்ரஹ்மநிஷ்டம், விதாந்' என்னும் பதங்களினால் இவ்வர்த்தம் விவரிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீகீதாசார்யனும் 'உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்த்வதர்ஶிந:' (தத்வத்தை உள்ளபடி யறிந்த ஜ்ஞாநிகள் உனக்கு அந்த ஜ்ஞாநத்தை உபதேசிப்பார்கள்) என்றும், ஸ்ரீபாஷ்யகாரரும், ஶ்ரவணமாவது 'தத்வதர்ஶிந ஆசார்யாத் ஸ ந்யாய வேதாந்த ஶ்ரவணம்' (உண்மையை யறிந்த ஆசார்யனிடத்திலிருந்து ந்யாயங்களுடன் அர்த்தத்தை அறிவது) என்றும் அருளிச்செய்தார்கள். ஆகையால் ஜ்ஞாநம் முதலிய குணங்கள் நிரம்பின ஆசார்யனை அடை

* இஃது சென்ற புரட்டாசி மீத்தில் திருவஹீந்திரபுரத்தில் ஸ்ரீவேதாந்த தேசிகன் ஸபையின் இரண்டாவது வர்ஷாரம்ப உத்ஸவத்தில் சேட்டலூர் வித்வான் ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம் பகவத் விஷயம் நரஸிம்மாசார்ய ஸ்வாமியால் செய்யப்பட்ட உபந்யாஸத் தினஸங்க்ரஹம்.

[illegible] மோக்ஷஸாதகமாகும். இவ்வர்த்தங்களை யெல்லாம் ஒன்று சேர்த்து நம் தேசிகன் ந்யாஸவிம்சதியில் ‘ [illegible] ’ (மிகுந்த க்ஷேமத்தை யடைய விருப்பமுள்ளவன் நல்ல ஸம்ப்ர தாயத்தில் ஸித்தி, ஜ்ஞானம், கருணை, சாந்தி, இந்திரிய ஜயம், சிஷ்யர்களுக்கு நன்மையை சிக்ஷிக்கும் தன்மை, அழியாத பந்துவாக விருந்து எப்பொழு தும் அவர்கள் நன்மையை நாடும் ஸ்வபாவம், டம்பம், பொறாமை, முதலிவை யில்லாதிருத்தல் இப்படிப் பட்டகுணங்கள் பொருந்திய ஆசார்யனை ஆச்ரயிக்க விரும்ப வேண்டும்) என்று ஸங்க்ரஹித்தருளினர். ‘[illegible]’ என்பதற்கு ([illegible]) தேசத்தைத் தானறிந்து அயலாருக்குக் காட்டிக் கொடுக்கத் தகுந்தவன், என்றர்த்தம். இவ்விடத்தில் ‘ [illegible] ’, ‘ [illegible] ’ இத்யாதி ப்ரயோகங்களை அறி யவேண்டும். கீழ்ச்சொல்லிய ந்யாஸ விம்சதி ச்லோகத்தில் ‘ [illegible] ’ என்னும் பதத்தை ஸ்வாமி பொதுவாக ஆசார்யர்களைக் குறித்து அநுஸந்தித் திருந்த போதிலும், நமது அநுஸந்தானத்தில் இதை யருளிச்செய்தவராயும் [illegible] னென்று அஸாதாரணமாகத் திருநாமம் பெற்றவருமான ஸ்வாமி யையே குறிக்கிறதென்பது உசிதமாகும். இந்த ச்லோகம் ‘ [illegible] ’ என்பதைப்போல என்றறியவும். ஏனெனில் ‘ [illegible] ’ (சிஷ்யனுக்குரிய குணங்களெல்லாம் கூரத்தாழ்வானிடம் எப்படிப் பொருந்தி யிருந்தனவோ அப்படியே, ஆசார்யனுக் குரியவைகளாக ச்ருதிகளாலும் ரிஷிகளாலும் இந்த ஆசார்யனாலும் எடுத்துரைக்கப்பட்ட குணங்கள் எல்லாம் ஸர்வதந்த்ர ஸ்வ தந்த்ரன் என்று பெயர்பூண்ட இவ்வாசார்யனிடத்தில்கூடி மேன்மைபெற்று விளங்குகின்றன. மற்ற ஆசார்யர்களிடத்தில் இல்லை. இவற்றில் சிற்சில குண ங்களே பெரும்பாலும் அவர்கள் பக்கலில் காணப்பட்டன) என்று ப்ரதி



வாதி பயங்கரம் அண்ணன் அருளிச்செய்தார். இந்த மேன்மையே ‘ ஜ்ஞாந வைராக்ய பூஷண’ மென்னப்பட்டது. இதற்கு மற்ற விசேஷார்த்தங்கள் நிற்க, ஜ்ஞாந வைராக்யங்களுக்கு ஸ்ரீதேசிகன் பூர்ணமாயிருப்பவர் என்பது இங்கு கவனிக்கத்தக்கது. ‘ [illegible] ’ (உலகத்தில் குணங்களால் வஸ்துக்களுக்குப் பெருமை யென்பது ப்ரஸித்தம்; ஹேஹஸ்தி கிரிநாதனே! உம்மை யாச்ரயித்துக் குணங்கள் மேன்மை பெருவதால், இந்த ந்யாயம் உம்மிடத்தில் மாறிவிட்டது) என்று ஸ்ரீகூரத்தாழ்வான் அருளிச் செய்ததை இங்கு அநுஸந்திக்கவும். இப்படியே ‘ [illegible] ’ (பணக்காரரை யாச கர்க ளடைவதுபோல சுபையான பிராட்டியை அப்போது சுபசகுநங்க ளடை ந்தன) என்று ஸீதையின் ஸம்பந்தத்தினல் சகுநங்கள் மேன்மை பெற்றதை த்ருஷ்டாந்த முகத்தால் வால்மீகி மஹர்ஷி யருளிச்செய்திருப்பதும் இங்கு அநுஸந்திக்கத்தக்கது. இந்த வைபவாதிசயத்தைக் கருதியே ஸ்ரீதொட் டையாசார்ய ரென்று ப்ரஸித்திபெற்ற மஹாசார்யர் ‘ [illegible] ’ (வேதாந்தாசார்யனைவிட மற்றொருவர் ஆசார்யரல்ல, அவருடைய பக்தரல்லாதவர் ஸாத்விகரல்லர்; அவருடைய திவ்யஸூக்தியல்லா தது ப்ரபந்தமுமல்ல) என்று [illegible] மென்று கைதூக்கி ரிஷிகளின் ஸபையில் வ்யாஸர் உத்கோஷித்ததைப்போல சபதம் பண்ணியருளினர்.

இம்மஹாதிசயம் நம்மாசார்யனுக்குக் கிடைத்தது இந்த ஸ்தலத்தில் தான். தானான தன்மையிலேயே ‘ [illegible] ’ என்று தாமே அருளிச்செய்தபடியே இருபது திருநக்ஷத்ரத்தில் அம்மானு கிய அப்புள்ளாரிடம் ஸகல சாஸ்த்ரங்களையு மப்யஸித்த இவ்வாசார்யனுக்குப் புதிதாக ஒரு மஹிமை கிடைத்த தென்பது எப்படிப்பொருந்தும்? திரு வேங்கட முடையானுடைய அவதாரமான இவருக்கு மற்றொருவரால் கிடை க்கவேண்டிய பெருமையு முண்டோ? என்றும் சிலர் சங்கிக்கக்கூடும். இத ற்கு அவர் ஸ்ரீஸூக்திகளிலேயே ஸமாதானம் காணலாம். ‘ அடியவர்பால் மெய்யைவைத்து தெருள்தாநின்ற தெய்வநாயகா’ என்று மும்மணிக்கோவை யின் ஆரம்பத்திலும் ‘ வெள்ளைப்பரிமுகர் தேசிகராய் விரகாலடியோ முள்

னத்தெழுதியது' என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலு மருளிச்செய்தார். ஆதலால் ஸ்ரீராமக்ருஷ்ணர்களுக்கு விச்வாமித்ர ஸாந்திபிநிக்களுபதேசித்தது போலே, ஹயக்ரீவாநுக்ரஹம் பெற்றபிறகு ஏற்கனவேயிருந்த ஜ்ஞானிகளுக்கு ஓர் அதிசயமுண்டாயிற்றென்று அங்கீகரிக்கவேண்டும். இதைக்கணிசித்து மஹாசார்யர் 'தாரமவது ந தெஜொவ்யஹ தாஸ்யஹேஸ்வீ:' என்றருளிச்செய்தார் இவ்வர்த்தத்தை 'அமையாவிவை யென்னு மாசையினால்' என்னும் பாட்டினால் ஸ்ரீதேசிகனே ஸூசிப்பித்தார். இப்படி, விச்வாமித்திரர் உபதேசித்தபோது அஸ்த்ர தேவதைகள் ஸ்ரீராமனை ப்ரார்த்தித்தபடியே வித்யா தேவதைகள் 'ஜமெஹ கிம் கராஸவ' என்று இவரை ப்ரார்த்தித்தபடியினால் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் என்றும் திருநாமம் இவருக்குப் பொருந்தியது.

இங்கு சிலர் இவருடைய ஜ்ஞானம் ஹயக்ரீவ உபாஸநத்தால் கிடைத்தபடியினால், ஆசார்யோப தேசக்ரமத்தில் வந்த அர்த்தங்களைப்போல ஆதரிக்கத்தக்கதல்ல வென்று கலங்குகிறார்கள். இது ந்யாயமல்ல. இதில் ஹயக்ரீவன் உபாதேயனல்லவா? உபாஸநம் கூடாதா? ஸ்ரீஹயக்ரீவன் பகவதவதாரமென்பது மஹாபாரதம், மோக்ஷதர்மத்தில் ப்ரஸித்தம். திருமங்கை யாழ்வார் 'மன்னு கலை நால்வேதப் பொருளை யெல்லாம் பரிமுகமா யருளிய அப்பரமன்' என்றும் 'முன்பரிமுகமாய் இசைகொள் வேதநூலென்றிவை பயந்தவனே' என்று மருளிச்செய்தார். ஸ்ரீபிள்ளை லோகாசார்யரும 'தத்வத்ரயம்' என்னும் ரஹஸ்யத்தில் ஈச்வர ப்ரகரணத்தில் 'ஹயக்ரீவ நரநாராயண ஹரிக்ருஷ்ண' இத்யாதியால் ஸ்ரீஹயக்ரீவனை பகவதவதார மென்றெடுத்தார். ஆனது பற்றி பகவதநுக்ரஹத்தால் வந்த ஜ்ஞாநமநுபாதேய மாகாது. அப்படியாகில் ஹயக்ரீவ முகத்தால் ப்ருமா வழியால் கிடைத்த வேதவேதாந்தங்களும் அநுபாதேயங்களே யாகும். மயர்வறமதிநல மருளப்பெற்ற ஆழ்வார் மூலமாக வந்த ஸம்ப்ரதாயங்களும் மநுபாதேயங்களாகும் 'தஸ்ஸ்ரீ திஜ்ஞாந ஹொஹநவ' (என்னிடமிருந்தே நினைவுஜ்ஞாநம்மறைவு என்பவை உண்டாகின்றன) என்றபடி ஸகல ஜ்ஞாநமும் பகவானிடத்தி லிருந்தே வரவேண்டு மாகையினால், அஜ்ஞாநம்தான் இவர்கள் பங்குக்கு விழுந்தது. உபாஸநத்தையும் நம்மாழ்வார் ஸ்ரீமந்நாதமுனிகள் முதலிய பூர்வாசார்களநுஷ்டித்தபடியால், நிஷித்த மென்ன வொண்ணாது- பக்தி ஸ்வரூப விருத்தமன்றென்பது ஆசார்யகளால் பரக்க நிரூபிக்கப் பட்டிருக்கின்றது. இங்குகாலம்



விரியுமென்று இச்சமாதானம் இம்மட்டில் நிறுத்தப்படுகின்றது. ஸ்ரீபாஷ்யகாரரும் 'உபாஸநமாவது ஹெயொம ஜஹிஜேலா கூதாசெஷதகா ஞாநம்) எல்லாவேதங்களையும் அவற்றி னர்த்தங்களையும் அறிந்தவர்களாயும் யோகத்தின் ப்ரபாவத்தினால் ப்ரத்யக்ஷமாக அறியப்பட்ட வேதங்களின் உண்மையான அர்த்தங்களையுடையவர்களாயும் இருப்பவர்களுடைய வாக்யங்களைக் கொண்டு தன்னாலறியப்பட்ட வேதவாக்யங்களை ஸ்பஷ்டமாக அறிதல்' என்றருளிச் செய்திருப்பது ஸ்ரீதேசிகன் ஹயக்ரீவ உபாஸநத்தால் பெற்ற ஜ்ஞாநமே மிகவும் உபாதேயம் என்பதற்குப் போதுமான ஆதாரமாயிற்று.

இப்படி அஸாதாரண மஹிமை ஸ்ரீதேசிகனுக்கு கிடைத்ததற்குக் காரணமாகிய இத்திருவஹீந்திர புரத்தில் இதை அவர்க்கநுக்ரஹித்த ஸ்ரீதேவநாயகன் திருமுன்பே அவருடைய உத்ஸவம் முதலிய விஸவங்கள் நடந்தேறிவருவது அந்தப்பகவானுக்கும் அந்த ஆசார்யனுக்கும் மிக உகப்பாயிருக்கும். இவ்விபவங்களாவன-சிஷ்யக்ருத்யாதிகாரத்தில் ஸ்ரீதேசிகநு 'கஸியிஷ ம...வ கீஷக வூஸம்ஸாதி ஸீஷ: வ்ருஷா பஹ.தி ஷுஷு வாஸாஷகெவி,' 'போற்றி யுகப்பதும் புந்தியிற்கொள்வதும் பொங்குபுகழ் சாற்றி வளர்ப்பதும்' என்றருளிச் செய்தபடியே அவரைப்பற்றிய ஸ்தோத்ரங்களை யநுஸந்தித்தும் அவர் திருமாளிகை அவர் ஸ்ரீகோசம் முதலிய வஸ்துக்களில் அவரிடத்திற் காட்டிலும் அதிக பஹுமானம் செய்வதுமேயாகும். அத்திருமாளிகை ஏற்பட்டது இங்கு தான். அதில் அவருடைய சிஷ்யர்களாகிய நம்மால் செய்யக்கூடிய பஹுமானங்களில் ப்ரதானம் அவ்விடத்தில் அவருடைக்ரந்தங்களைப் பரவச்செய்வதே. ஆதலால் அவற்றை விசேஷமாகக் கொண்டாட அபேக்ஷிக்கிறவர்கள் இக்ஷேத்ரத்தில் நடக்கும் நம் ஆசார்யனுடைய உத்ஸவத்தில் அன்வயிக்கும் கைங்கர்யபரர்களை ஆராதிப்பதையும், அவர் ஸ்ரீஸூக்திகளைக் கற்பிக்க பாடசாலை ஏற்படுத்துவதையும் அந்த ஸூக்திகளில் பரிச்ரமப்பட்ட வித்வான்களை கௌரவிப்பதையும் முக்கியநோக்கமாகக்கொண்ட இந்த ஸ்ரீ வேதாந்த தேசிக ஸபையில் தங்கள் தங்கள் ஆசார்ய பக்திக்கும் உத்ஸாஹத்துக்கும் சக்திக்கும் தக்கபடி அந்வயித்து க்ருதார்த்தகளாக வேண்டுமென்று ப்ரார்த்திக்கப் படுகிறார்கள்.

ஸ்ரீ:

# வேறுபத்திரிகை ஸங்க்ரஹம்.

## மடாதிபதிகள் கவனிக்கவேண்டும்

'தமிழ் நாட்டில் தமிழ் அரசர்களாலும் நாட்டினர்களாலும் ஆதரிக்கப்பட்டு மத தர்மங்களையும் ஆலயங்களையும் பரிபாலனம் செய்யும் பொருட்டு ஏராளமான திரவ்யங்கள் அளிக்கப்பட்டு அதற்கு விசாரணை கர்த்தாக்களாகப்பலரை நியமித்திருக்கின்றனர். குடும்பப் பற்றில்லாத துறவிகளை ஏற்படுத்தினல் தர்மங்களை சரியாகப் பரிபாலனம் செய்வார்கள் என்பதே அத்தகைய நியமனங்களின் காரணமாகும். ஆனல் அனுபவத்திலோ நேர் விரோதமாக நடந்தும் வருகிறது. திரவியம் சேர்ப்பதிலேயே சிலர் கருத்தாக விருக்கின்றனர். சொத்து விஷயமாய் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவுசெய்து கோர்ட்டுகளில் வழக்காடி வருகிறார்கள். எத்தனையோ கிரிமினல் வழக்குகளும் ஏற்பட்டிருக்கின்றன. உண்மையாகத் தாங்கள் மடாதிபதிகளாய் எதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறோம் என்பதை அவர்களில் சிலர் உணரவில்லை. சிலர் சிலமற்றவர்களாயும் சிற்றின்ப ப்ரியர்களாயும் விளங்குகின்றனர். ராஜீய விஷயங்களில் அவர்கள் தலையிடா விட்டாலும் மத ஸம்பந்தமான வேலைகளை மட்டுமாவது ஒழுங்காகச்செய்து வரலாம். ஒவ்வொரு மடங்களையும் ஒவ்வொரு தேசிய பாடசாலைகளாகச் செய்யலாம். தமிழ்ப்பாஷையை விருத்தி செய்து மதப்படிப்புகளைக் கற்றுக்கொடுக்கலாம். நமது மத தர்மத்திற்கு விரோதமான காரியங்களுக்கு இடங்கொடுக்காம லிருக்கலாம். தென்னை மரங்களைக் கள்ளுக் குத்தகைக்கு விடாம லிருக்கலாம். கோவில்களிலும் மடங்களிலும் பெரும்பாலும் சீர்மைத் துணிகளே உபயோகப் படுத்தப்படுகின்றன. நமது தேசத்தில் நூற்கப்பட்டு நமது தேசத்தில் நெய்யப்படுகிற கதர்த்துணிகளையே உபயோகிக்கப்படுத்தும்படி செய்யலாம். மதப் பிரசாரகர்களை ஊர் ஊராக அனுப்பி மதப் பிரசாரம் செய்யலாம். காலத்திற்கு ஏற்றபடி தகுந்த வழிகளில் நடந்துகொள்ள வேண்டியது அவர்கள் கடமை. சில கோவில்களுக்கு ஏராள சொத்துக்கள் இருந்தும் தர்மங்கள் சரியாக நடத்தப்படவில்லை. உற்சவகாலங்களில் சிறப்பாய் நடத்திவிட்டு மற்றக்காலங்களில் வெளவ்வால் அடைந்து கிடக்கின்றன. இதைப்பற்றி ஆங்காங்குள்ள பிரமுகர்கள் தகுந்த கவலை எடுத்துக்கொள்ளவேண்டும்' என்று ஸ்ரீமான் காரகுடி சின்னையா பிள்ளை 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் எழுதுகிறார்.—

ஸ்ரீ:.

# கோயமுத்தூர் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை.

(கார்யதர்சி ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைல சக்ரவர்த்தி ஸ்வாமி அறிவிப்பது.)

சென்ற ஆனிமீத்தில் இவ்வூரில் ஆரம்பிக்கப்பட்ட ஷை ஸபையானது இதுவரையில் ஸம்ப்ரதாயப்ரவசநத்தில் த்ருப்திகரமான ப்ரவ்ருத்திகளைச் செய்து வருகின்றது. இங்குள்ள ஸ்ரீவைஷ்ணவரனைவரும் இன்னும் ஸபையில் சேர்ந்ததாகவில்லை. எனினும் 35-மெம்பர்களுக்குறையாமல் ஒவ்வொரு ஸங்கத்திலும் அந்வயித்து வந்திருக்கிறார்கள். ஸ்ரீவைஷ்ணவர்கள் மிகக்குறைவாயுள்ள இவ்வூரில் இவ்வளவு ஸ்வாமிகள் ஒன்று கூடுவதும் விசேஷமென்றே சொல்லவேண்டும். வெகு சீக்கிரத்தில் இன்னும் மற்றவர்களும் சேர்ந்து விடுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஸபையின் அபிவ்ருத்திக்கு அவச்யாபேக்ஷிதமான த்ரவ்யார்ஜ்ஜநமும் இனித் துவக்கப்படவேண்டும்.

இது வரையில் ஸபை ஆறுதடவைகளில் கூடிற்று. அவற்றில் நான்கு ஸங்கங்கள் காலஞ்சென்ற ஸப் ஜட்ஜு ஸ்ரீ ராமஸ்வாமி அய்யங்காருடைய ராமபத்ரபவநத்தில் நடைபெற்றன. மற்ற விரண்டும் ஸ்ரீகோபாலஸ்வாமி கோவிலில் நடந்தன. ஊர் ஸ்வாமிகளெல்லாம் ஸௌகர்யமாகக் கூடும் பொருட்டு இந்த ஸங்கங்களை நிரந்தரமாக ஒரு பொது ஸ்தலத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் சீக்கிரத்தில் செய்யவேண்டும்.

மேற்கண்டபடி நடந்த கூட்டங்களில் முதலாவதான 6-8-1922 இ, யதில் ஸ்ரீ. உ, வே. வித்வான் பைரோஜி ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி தத்வத்ரயம் என்னும் விஷயத்தைப்பற்றியும், இரண்டாவதில் (10-9-1922) வித்வான் ஸ்ரீ, உ. வே. சுண்டப்பாளயம் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி பரதேவதாபாரமார்த்யம் என்பதைப்பற்றியும், அதனடுத்த 1-9-1922, ல் கூடியஸங்கத்தில் வக்கீல் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைல சக்ரவர்த்தி ஸ்வாமி விசிஷ்டாத்வைதம் என்னும் விஷயத்தைப்பற்றியும் முறையே உபந்யஸித்தார்கள். ஸபையோர்கள் இவற்றைக்கேட்டு ஆநந்தித்து உத்ஸாஹத்தோடு கூடினவர்களாய், இனி ப்ரதிமாஸமும் 2-தடவை ஒழுங்காக ஸபையின் கூட்டங்களைக் கூட்டவேண்டுமென்றும் ப்ரபலவித்வான்களாகிய பண்டிதபூஷணம் ஸ்ரீ. உ. வே. சேட்டலூர் நரஸிம்மாசார்யஸ்வாமி, இஞ்சிமேடு ஸ்ரீ. உ. வே. ரங்கநாதாசார்யஸ்வாமி முதலியவர்களை வரவழைத்து அவர்கள் முகமாக ஸம்ப்ரதாய ப்ரவசநங்களை இங்கு செய்விக்கவேண்டுமென்றும், இன்னும் இந்த ஸபையின் உத்தரோத்தராபிவ்ருத்திக்கு அவச்யமான மற்ற ஏற்பாடுகளையும் சீக்கிரத்தில் செய்துவிட வேண்டுமென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். ஸ்ரீயஃபதியின் க்ருபையால் எல்லாம் கைகூடுமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

ஸ்ரீ:

# பகவந்நாம வைபவ நிரூபணம்.

(முன் தொடர்ச்சி.)

அப்படி வந்த விஷ்ணுதூதர்கள் யமதூதர்களிடத்தி னின்றும் விகர்மஸ்தனை இவனுடைய துராசாரங்களை நிரூபித்து 'தத³ேநம் த³ண்ட³பாணே: ஸகாஶம் க்ருதகில்பி³ஷம் | நேஷ்யாமோ(அ)க்ருதநிர்வேஶம் யத்ர த³ண்டே³ந ஶுத்³த்⁴யதி ||' (அப்படிப் பாபச் செய்கைகளை மிகவும் செய்தும் ப்ராயச்சித்தம் பண்ணிக் கொள்ளாதவனுமான இவனை நரகபாதநாதிகளால் தண்டித்துச் சுத்தி செய்யவேண்டி யமஸாமீப்யத்தை அடைவியா நின்றோ)மென்று சொல்லக்கேட்டு அதற்கு பதில் சொல்லுகிறார்கள். 'அயம் ஹி க்ருதநிர்வேஶோ ஜந்மகோட்யம்ஹஸாமபி | யத்³வ்யாஜஹார விவஶோ நாம ஸ்வஸ்த்யயநம் ஹரே: | ஏதேநைவ ஹ்யகோ⁴நோ(அ)ஸ்ய க்ருதம் ஸ்யாத³க⁴நிஷ்க்ருதம் | யதா³ நாராயணாயேதி ஜகா³த³ சதுரக்ஷரம் || ஸ்தேந: ஸுராபோ மித்ரத்⁴ருக் ப்³ரஹ்மஹா கு³ருதல்பக³: | ஸ்த்ரீராஜபித்ருகோ³ஹந்தா யே ச பாதகிநோ(அ)பரே | ஸர்வேஷாமப்யக⁴வதாமித³மேவ ஸுநிஷ்க்ருதம் | நாமவ்யாஹரணம் விஷ்ணோர்யதஸ்தத்³விஷயா மதி: ||' (இவன் கடைசிவரைத்தையாக எப்போது நாராயணா வென்னும் நாலக்ஷரத்தை உச்சரித்துவிட்டானோ அப்போதே அனேக ஜன்மங்களில் செய்த பாபங்களுக்கெல்லாம் ப்ராயச்சித்தம் செய்துகொண்டவனாகிறான். களவு, கட்குடி மித்திரத்துரோகம் முதலான மகாபாபங்களைச் செய்தவர்களா யிருந்தாலும் கடைசியில் பகவந்நாமத்தை யுச்சரிப்பதால் எல்லாவிதமான பாபங்களுக்கும் ப்ராயச்சித்தம் செய்தவர்களாகிறார்கள். பகவத் விஷயபுத்தியை உண்டுபண்ணுவதால் இதுவே சிறந்த ப்ராயச்சித்தமாகும்.) ('ஸாங்கேத்யம் பாரிஹாஸ்யம் வா ஸ்தோப⁴ம் ஹேலநமேவ வா | வைகுண்ட²நாமக்³ரஹணமஶேஷாக⁴ஹரம் விது³: ||' (பெயரிடுதல். பழித்துச்சொல்லுதல், கானபூரணாதிகளி லுச்சரிப்பது, ஒருவனை நிந்திக்கும்போது நடுவில் சொல்லுவது, போன்ற எந்தவிதத்திலாவது பகவானுடைய நாமத்தைச் சொல்லுதலானது ஸமஸ்த பாபங்களையும் போக்கடிக்குமதாகச் சொல்லுகிறார்கள். 'பதித: ஸ்க²லிதோ ப⁴க்³ந: ஸந்த³ஷ்டஸ்தப்த ஆஹத: | ஹரிரித்யவஶேநாஹ புமாந்நார்ஹதி யாதநா: || கு³ரூணாஞ்ச லகூ⁴நாஞ்ச கு³ரூணி ச லகூ⁴நி ச | ப்ராய-



ஶ்சித்தாநி பாபாநாம் ஜ்ஞாத்வோக்தாநி மஹர்ஷிபி⁴: | தைஸ்தாந்யகா⁴நி பூயந்தே தபோதா³நவ்ரதாதி³பி⁴: | நாத⁴ர்மஜம் தத்³த்⁴ருத³யம் தத³பீஶாங்க்⁴ரிஸேவயா || அஜ்ஞாநாத³த²வா ஜ்ஞாநாது³த்தமஶ்லோகநாம யத் | ஸங்கீர்திதமக⁴ம் பும்ஸோ த³ஹேதே³தோ⁴ யதா²நல: | யதா²க³த³ம் வீர்யதமமுபயுக்தம் யத்³ருச்ச²யா | அஜாநதோ(அ)ப்யாத்மகு³ணம் குர்யாந்மந்த்ரோ(அ)ப்யுதா³ஹ்ருத: ||' (உயர்ந்த விடத்தினின்றும் கீழ்விழுந்தவன் காலிடறினவன், அவயவங்க ளொடிந்தவன், ஜந்துக்களால் கடிக்கப்பட்டவன், ஜ்வரதப்தன், அடிக்கப்பட்டவன், ஆகிய இவர்கள் அவஶமாக 'ஹரி' யென்று சொன்னாலும், யம யாதனைக்கநர்ஹர்களாவர்கள். பாபங்களுடைய பெரிது சிறிதுகளுக்குத் தகுந்தபடி பெரியதும் சிறியதுமான ப்ராயச்சித்தங்களை அறிந்து மஹர்ஷிகளான ஜஷிகள் சொன்னார்களே யாகிலும் தபஸ்ஸு தானம் காயக்லேஶ ரூபமான வ்ரதம் இவற்றின் வடிவான அந்தப்ராயச்சித்தங்கள் குறிப்பிட்ட அவ்வவ பாபங்களைப் போக்கடிக்குமொழிய அதர்மங்களை ஜநிப்பிக்கும் அவன் ஹ்ருதயத்தை ஶுத்தி செய்யமாட்டாது. நாமஸ்மரணமானது பாபங்களைப் போக்கடிப்பதோடு நில்லாமல் அதர்மங்கள் புகுராதபடி சித்தத்தையும் சுத்தம் பண்ணத்தக்க தொன்றாகையாலே ஒப்புயர்வில்லா ப்ராயச்சித்தமாக நின்றது. நெருப்பானது தன் சக்தியையறிந்தோ அறியாமலோ தீண்டினவனை எப்படித்தஹிக்கின்றதோ, அப்படியே பகவந்நாமத்தின் ஶக்தியையறிந்தும் அறியாமலும் உச்சரிப்பதானது பாபராசியைத் தஹியாநிற்கும். தன்குணத்தை யறியாதவனு லுண்ணப்பட்ட வீர்யமுள்ள மருந்தானது எப்படி ரோக நிவ்ருத்தியை யுண்டுபண்ணியல்லது நில்லாதோ அப்படியே பகவந்நாமமும் தன் சக்தியையறியாதவனால் அகஸ்மாத்தாக உச்சரிக்கப்பட்டாலும் பாபஸமூஹத்தைப் போக்கடித்தே தீரும்) என்றிப்படி விஷ்ணுதூதர்களால் சொல்லக்கேட்ட யமதூதர்கள் 'த ஏவம் ஸுவிநிர்ணீய த⁴ர்மம் பா⁴க³வதம் ந்ருப ! தம் யாம்யபாஶாந்நிர்முச்ய விப்ரம் ம்ருத்யோரமூமுசந் ||' என்று இப்படி பகவந்நாமத்தினுடைய பாபநிவர்த்தன சக்தியை நிச்சயித்துக் கொண்டவர்களாய் யமனுடைய பாசத்தினின்றும் அந்தப் பிராமணனைக் கட்டவிழ்த்துவிட்டு மரணத்தினின்றும் தப்பவிட்டார்க ளென்கையாலே யமவச்யதையைத் தவிர்ப்பித்தபடியைச் சொல்லி, 'ஸாந்த்³ரம் விஹாய ஸவிதோ⁴ ஹாவாராஷ கிங்கரே: | தேஹம் விஜாந நாஶாஹ்யபாஶ பத்ரு ஶிரஸ்யபி ||' என்று அப்படி யமபாசத்தி னின்றும் விடுதலை யடைந்த அஜாமிளன் மஹான்களுடைய ஸங்தர்சநத்தினால் வந்த ஜ்ஞாநோதயத்தை யடைந்து தன்னுடைய பூர்வ வ்ருத்தா

ந்தத்தை யநுஸந்தித்து மகத்தான அநுதாபத்தை யுடையவனாய் தீருஹ ரீசபுத்ராதிகளிடத்தில் ஸங்கத்தைவிட்டு கங்கா த்வாரத்தையடைந்து பரப்ரும்மத்தினிடத்தில் லயித்த புத்தியையுடையவனாய், சரீரத்தை அங்கேயே பொகட்டு பகவத் பார்ஷதர்களுடைய ஸ்வரூபத்தை க்ரஹித்தவனும், ‘ஏதாவதாலமகநிர்ஹரணாய பும்ஸாம் ஸங்கீர்த்தநம் பகவதோ குணகர்மநாம்நாம் । விக்ருஶ்ய புத்ரமகவாந் யதஜாமிலோऽபி நாராயணேதி ம்ரியமாண உபைதி முக்திம் ॥’ (மனிதர்களுக்கு பாபங்களைப் போக்கடித்துக்கொள்ள பகவந்நாமோச்சாரண மொன்றே போதுமானது; ஏனென்றால் மரணத்தருவாயிலிருந்த பாபச்செயல்களில் கைதேர்ந்த அஜாமிளன் கூட அவசமாகப் புத்திரனை ‘நாராயணா, வென்றழைத்து மோக்ஷத்தை யடையா நின்றானல்லவா), என்று சொல்லி யமனும், ஆச்சர்யப்படும்படி விஷ்ணு ஸாலோக்யத்தை யடைந்தானென் கையாலே திருநாமம் அஜாமிளன் பக்கலிலே அத்ருஷ்ட பல ஸாதநமாயிற்று.

‘மம ஆகர்ஷதே தீரே க்ராஹ ஆகர்ஷதே ஜலே।’ என்று மடுவிலே யானை கரையிலே இழுக்க முதலை தண்ணீரிலே இழுக்க இப்படி ஆயிரம் வருஷம் முதலைச்சிறைப்பட்டு நின்ற ஸ்ரீகஜேந்திரன் செயலற்று ஸ்வயத்நத்தினின்றும் தவிர்ந்து ‘நாஹம் கலேவரஸ்யாஸ்ய த்ராணார்த்தம் மதுஸூதந । கரஸ்த கமலாந்யேவ பாதயோ ரர்ப்பிதம் தவ ॥’ (நான் ஸ்வதஏவ விநாசியான இச்சரீரத்திற்காக இவ்வரும்பாடு படுகிறேனில்லை; கையிலெடுத்த கமல மலர்களைச் செவ்வியழியாமல் உன் திருவடிகளிலிட வல்லேனாகவேணுமேயென்று சோகியாநின்றேன்) என்று கையை உயரவெடுத்து “நாராயணா! ஓ! மணிவண்ணா! நாகணையாய்! வாராயென்னாரிடரை நீக்காய்” என்று திருநாமங்களை யுச்சரித்துக் கூப்பிடா நிற்கச்செய்தே ‘அந்தஃபுர ஸேநாபதி ஹஸ்த ஶ்லிஷ்ட கரஸ்தப்ரணீத மணிபாதுகம் கிமிதி வாசா ஹ்ருதம் ஸ்வாஹந வாஸிஷ்டஜ வைநதேயம் ஆரோஹதஃ கரிவராப்யஹிதே ஸமவத ஸ்வாமிநே நமஃ ॥’ (யானையின் ஆர்த்த த்வநிசெவிப்பட்டவாறே ஸேனை முதலியாருடைய கைகளை யூன்றிக்கொள்ளாமலும், ஸமீபத்தில் வைக்கப்பட்ட ஸ்ரீ பாதுகைகளை திருவடிகளில் சாற்றிக்கொள்ளாமலும், ஸ்ரீபூமிநீளை தொடக்கமான தேவிமார்களும் என் வந்ததோவென்று கலங்கும்படிக்கும், வாஹநாலங்காரத்தைச் செய்துகொள்ளாத திருவடியின் மீது ஆரோகணித்து ஓடிவருகிற பகவானுடைய வேகத்திற்குத் தண்டம் ஸமர்ப்பிக்கிறேன்) என்று அநுகூலர்முந்த



ளாசாஸநம் பண்ணும்படி ‘விண்ணுளார் வியப்பவந்து மடுக்கரையிலே தோன்றி ‘ஸியாவிக்ஷேபாரோஸ க்ராஹம் சக்ரேண ஜாயவஃ।’ என்று யானைக்கு ஹாநிவாராதபடி முதலையை இருகூறாக்கி கஜேந்திரனுடைய ஆர்த்திதணித்து மனங்குளிர மலரிட்டு வணங்கும்படி எம்பெருமான் நின்றருளுகையாலே த்ருஷ்டபல ஸாதநமாகவும் அத்துடன் நில்லாமல் ஸ்ரீகஜேந்திரனைப்பழையதான தேவபதத்தையும் ப்ராபிக்கும்படி கடாக்ஷித்தருளுகையாலே அத்ருஷ்டபல ஸாதநமாகவும் இப்படித்திருநாமம் ஸ்ரீகஜேந்திரன் பக்கலிலே த்ருஷ்டாத்ருஷ்ட பல ஸாதநமாயிற்று.

ஆகையால் இதன் பெருமை வாசாமகோசரமா யிருக்குமென்னுமிடம் ‘வ்யாபிநோ ஜயஶீலஸ்ய நாமாநி வாஸுதேவஸ்ய குணவந்தி மஹாத்மந: । ஸஹாஸ்ரைரபி வர்ஷாணாம் த்ரைலோக்யம் ஸமுதிதம் ந வக்தும் ஶக்நுயாத் ॥’ (எங்கும் வ்யாபித்தவனாய் எல்லாரிலும் பெரியவனாய் ஜயசீலனான வாஸுதேவனுடைய குணங்கள் அதாவது குணப்ரகாசகமான திருநாமங்களும் அதன் பெருமையும் மூன்றுலோகங்களிலுள்ளவர்களும் ஒன்று சேர்ந்து அனேக ஆயிர வர்ஷங்கள் சொல்லுவதென்றாலும் முடியாத தொன்றாயிருக்கும்) என்று மஹாபாரதத்தில் சொல்லப்பட்டது.

‘ஆகாஶம் பூரயந் பாணைர் யதா நாப்நோதி ஸம்க்ஷயம் । ததைவ வாணி கோவிந்த நாமமாஹாத்ம்ய ஸம்க்ஷயம் ॥’ (ஆகாசத்தை பாணங்கொண்டு பூரணம் பண்ணத்தொடங்கினவன் எப்படி ஆகாசத்தின் அவகாசமின்றி மீளாமல் கையிலிருந்த பாணங்கள் குறைந்தே மீளுவனோ அப்படியே புத்திகோசரமாகாமையாலே கையோய்ந்து மீளுகிறதித்தனையொழிய கோவிந்தனுடைய குணவாசகமான திருநாமத்தினுடைய பலத்தினெல்லை கண்டன்று) என்னாநின்றதிறே.

ஆக இவ்வளவாலும் ஸம்ஸாரார்ணவ மக்நர்களாய் அதினின்றும் கரையேற விரும்புமவர்களுக்கு பகவந்நாமங்களல்லது வேறு ஸுலபமான உபாயம் மற்றொன்றில்லை யென்றதாயிற்று.

ஸாதிராஸாதிரம் நாம வேதிதும் ஸமாஹாம்।
ஸ்ரவஸ்தாராம் விராமிது வணிநோதா ஹம்ஸநீதிஃ ॥

வேளுக்குடி சேஷாத்ரி தாஸ:.

# தத்வத்ரயம்.

'விஶ - ஷவிஜ்ஞா_ந வ_நஷ்ட-வம் விஜ்ஞா_ந வி ரூாண_ந வஷீக்ஷம் ஓயா நியம் ஜெ ஹாஷா தாம ஶரண்ய ஜெவம் ஹயதீ வ ஊைம ஹு வ[illegible] ॥' 'க_நக ஜ_நஷா ஹவீ ஸஂஸா ர வஷவீ வ ஜ_நு । மோ ஹ ஶ்ரூ ஹ ஆ[illegible] தாவஸ்ள வாஸ_நா ரெண க ணித ॥' (அநேகமாயிரம் ஜன்மங்களில் ஸம்ஸார பதவியை நடத்தி அதன் வாஸனையினால் ஞானம் மழுங்கி இவ்வன் மோஹத்தையும் துக்கத்தையும் அடைந்திருக்கிறான்) என்றபடியே உறைமெழுக்குப்போலே ப்ரக்ருதியில் அழுந்தி ஸ்வரூப ப்ராப்தமான பகவத் கைங்கர்யத்தை யிழந்திருக்கிற ஸம்ஸாரியான சேதனன் திறத்தில் ஸ்வபாவத்திலேயே ஸௌஹார்த்தத்தையுடைய ச்ரியபதியானவன் 'அவிடிவிஶ்லி_நு ஜு ஜெ ஜ ஜ_நு வி [illegible] ஜா த நிவெ ஹா । கரண ஹெ ஜ வா ஜெ ய ஜ வி தாவலி வ்யஷ ஜெ ஶ_நாய கா ணெக்ஷ ॥' (ப்ரளயகாலத்தில் அசேதநங்களோடு வாசியறக்கிடக்கும் ஜந்துக்களைப்பார்த்து வெறுப்படைந்திருக்கிற நாதனான பகவானுடைய ஹேக்ருபையே! நீ அவர்களுக்கு உஜ்ஜீவனார்த்தமான ப்ரவ்ருத்திக் குபயுக்தமான சரீரங்களைக் கொடுக்கிறாய்) என்கிறபடியே ஸ்வாராதனார்த்தமாகக் கரண களேபரங்களைக் கொடுத்தும், ஜீவாத்மாவுக்கும் ஈச்வரனுக்கும் ஸ்வாபாவிகமாக விருக்கிற சேஷசேஷி பாவஸம்பந்தத்தையும், ஸ்வாமித்வ தாஸத்வ, ரக்ஷகத்வ ரக்ஷ்யத்வ, ஆதேயத்வ விதேயத்வ, நியந்த்ருத்வ நியாம்யத்வாதிகளையும் ப்ரதிபாதிக்கிற ரஹஸ்ய த்ரயங்கள் என்று ப்ரஸித்தங்களான மூலமந்த்ரம், மந்த்ரரத்நம் (த்வயம்), சரமச்லோகம், என்பவைகளை உபதேசிக்கும் ஸதாசார்யர்களைக் கொடுத்தும், ப்ரபத்தி என்னும் வ்யாஜத்தை மாத்திரம் அபேக்ஷித்து ஆச்ரயிப்பவனை ரக்ஷிக்க ஸமயம் பார்த்திருப்பதும், ஆக இப்படிகளில் அவன் செய்யும் பரமோபகாரங்களை யெல்லாம் மறந்து, க்ருதக்நனாய் விஷய போகாஸக்தனான ஸம்ஸாரி சேதனர்களில் ஆயிரத்தில் ஒருவனுக்கு தத்வத்தை அறியும் ஆவலும், அதுக்குப் பலமான பரமபுருஷார்த்த ப்ராப்தியில் அபிருசியும் உண்டாகிறது. '[illegible] ஜ_நு ஸ க்ஷ தவிஷ ஷ ஹ ஜெவா ர ஷ ஶ ர ஶ வ ரக்ஷ । ஸவாதி நி த்ரவிஷ ரக்ஷா ஸக்ஷா ஷெவ ஶ வாயிநீ வி த்ய ॥' பஹுஜன்மங்களில் செய்த ஸுக்ருதங்களினால் லித்தனாயும் ப்ரும்மவிதபசாரத்துக்கு வெகுதூரத்தி லிருப்பவனாயும் இருக்கும் புருஷனை நித்யமான அன்பையுடையதும் மோக்ஷத்தை ஸாதித்துக் கொடுப்பதுமான வித்யையானது வந்தடைகிறது) என்கிற ப்ரகாரத்தாலே அந்தத் தத்வவிசாரத்தை 'ஆவிெ_நாதிஷ



ஶாஜ்ஞாய ஹ ஜுவாமெ ஷா வ தவி' சாஸ்த்ரார்த்தங்களைத் திரட்டி எடுக்கிறான், ஆசாரத்தில் நிலைபெறச் செய்கிறான்) என்றும், 'ஸிஷம் ஸ ஜெ ஷாயெ' (ஸத்ஸம்ப்ரதாயத்தில் ஸித்தியடைந்தவன்) என்றும் சொல்லுகிறபடி ஆச்ரயிப்பதற்கு உபயுக்தங்களான குணங்களையுடைய ஸதாசார்யன் பக்கல் செய்ய வேண்டும். 'ஆவ ய வா வ ஷெ ரெவெ' (ஆசார்யனையடைந்த புருஷனை அறிகிறான்), 'ஜெவ வா வாய 8 வாவீ த' (பகவானைப்போல் ஆசார்யனையும் உபாஸிக்கக்கடவன், 'வாவிஷக்ஷ ஜெ ஶ வ ணஶீக ஶ வ ணு க்ஷ । ஆவ ய வ ஷ யா 8 ஜ ள (மஹா பாபியான க்ஷத்ரபந்துவும் மஹா புண்யவானான புண்டரீகருமாகிய இருவரும் ஆசார்ய ஸம்பந்தத்தாலேயே முக்தியடைந்தார்கள்) என்று ப்ரமாணங்கள் சொல்லுகின்றன.

தத்வங்கள் ஜொ க்ஷ (அநுபவிப்பவன்), ஜொஷ்யம் (அநுபவிக்கப்படுவது), ஜெ ரிதா (நியமிக்கிறவன்) என்று மூன்றுவிதமாயிருக்கின்றன; அவை வது ஜீவன், ப்ரக்ருதி, ஈச்வரன் என்று. ப்ரக்ருதியின் லக்ஷணம் அசேதநம், பிறர்க்கே உதவுவது முதலியது. அணுவாயிருக்கச் செய்தேயும் ஸ்வபாவத்தில் சேஷனாய், (சரீரபூதனாய்) இருக்கச்செய்தேயும் ஜ்ஞாநத்தை யுடைத்தாயிருத்தல் முதலியவை ஜீவலக்ஷணம். விபுவா (பெரியதா)யும், [illegible] தன்யத்தோடு கூடியதாயும் இருப்பது முதலியவை ஈச்வரலக்ஷணம். ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் ஜீவனுக்கு தேஹமே ஆத்மா என்கிற ப்ரமம், ஜீவனுடையகான் ஸ்வதந்த்ரன் என்னும் ப்ரமம், ஈச்வரனில்லை யென்னும் வாதம் முதலான ப்ரமங்கள் உண்டாகின்றன. இதற்கு நிவ்ருத்தி ஸதாசார்யனால் உபதேசிக்கப்பெற்ற மூலமந்த்ரத்தின் அர்த்தாநுஸந்தானத்தால் வருகிறது.

'ஜெஹாவஸ்தா த வ ஷிய ஷி ஸவதி வஷ ஸாய ஷிஷ்யா ஜ தீவம் ஷா தஜ்ய ஶெலா யதிஷ்யா ஜ ஷ ய தி தா ஜெஷ ஷயீ ஜெஷ ஸதீய । ஆ ஷா ணொ ஷ வ ஜெஷ ந3 உ ஷி ஷ ஷா ஸ ஷ ஷ ஷா ஷ ஜ ஷ ஷ ஷ _நா ரா யணா வ்யம் விஷய வ ஷ ய ஜெஷ ஷ த ஷ ஷ ॥' என்னும் ப்ரமாணத்தால் இந்த மந்த்ரார்த்தானுஸந்தானத்தால் ஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம் இவைகளின் ஜ்ஞாநமுண்டாகிறது. இதற்குத் தாத்பர்யம்:—சரீரமே ஆத்மா என்னும் புத்தியையுடையவர் ப்ரணவத்தின் மூன்றாவது எழுத்தான மகாரத்தின் பொருளை நன்றாய்த்தெரிந்து கொள்ளக்கடவர்கள்; ஆத்மா ஸ்வதந்த்ரன் என்னும் நினைவினால் உட்கண் [illegible] அதன் முதலெழுத்தாகிய அகாரத்தின் அர்த்தத்தை விமர்

சிக்கடவர்; பகவானைத்தவிரத்தனக்கு வேறு ரக்ஷகருண்டென்றும் அவருக்கும் தாம் சேஷமென்றும் வரும் மயக்கங்கள் அதன் இரண்டாவதெழுத்தான உகாரத்தின் தாத்பர்யத்தினால் ஒழியும்; அப்படியே தன்னைத்தானே ரக்ஷித்துக்கொள்ளமுடியும் என்னும் துர்ப்புத்தி நம: என்பதின் அர்த்தத்தை யறிவதால் கழிந்து விடும்; பந்துக்கள் என்று உறவுகொண்டாடும் போலிகளிடத்தில் நம்பிக்கை வைப்பவன் நாராயண சப்தார்த்தத்தை உணர்ந்து தேறுவான்; விஷய ஸுகங்களில் சபல புத்தியையுடையவன், மூலமந்த்ரத்தின் நான்காவது பதமென்னும்படியான ஆய என்னும் நான்காம் வேற்றுமை உருபின் பொருளைச்சிந்தித்தால் பகவத்கைங்கர்யமே பரமபுருஷார்த்தமென்றும் தெரிந்துகொள்வான்—என்று.

இப்படித்தேறினபின்பு ஸதாசார்யஸாக்ஷிகமாய் ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் திருவடிகளில் ஐந்து அங்கங்களோடு கூடிய தன்னுடைய ஆத்மஸம்ரக்ஷணத்துக்காக பரஸமர்ப்பணம் செய்யவேண்டும். இப்படிக்கு க்ருதக்ருத்யனாயிருப்பவன் ''ஆஜ்ஞாநுகூலவ்ருத்திஷ்டவ ஸர்வஜந ப்ரதீபந வ்ருத்தி: ஸாஸ்த்ரதஜாத ஸேவாவிசேஷ வஸகெந யாவதிஷ்டம் வ்யவ்ருத்த: । கர்ம ப்ராரப்தகாயம் வ்யயந ஸுஹ்ருஷ்ட ஸேஷம் நிர்விஸ்ய காலே ஸ்ரீஸைந்யஸேவித பகவத: பாதமூலம் ப்ரபந்ந: ॥'' (நிர்தோஷர்களான பூர்வாசார்யர்களனுஷ்டித்துக்காட்டியபடியே தானும் பகவதாஜ்ஞையினால், செய்யாவிட்டால் தோஷம் என்று விதிக்கப்பட்ட நித்யநைமித்திக கர்மங்களாகிற கைங்கர்யங்களைத்தவறாமல் செய்தும், ச்ரேயஸ்கரங்களான அநுஜ்ஞாகைங்கர்யங்களில் தனக்குச் சக்யமாயிருப்பவற்றில் இஷ்டமுள்ளவரையில் ப்ரவ்ருத்தித்துப் பலம் கொடுக்கவாரம்பித்த புண்யபாபரூபங்களான இருவிதகர்மபலங்களிலும், ப்ரபத்தியின் மஹிமையினால் கழிந்ததுபோக மிகுதியிருக்கும் அம்சங்களை கர்மத்தின் கடன் ஒழிகிறதென்னும் நினைவுடன் அநுபவித்தும், இப்படி நிர்ப்பரனாய்த்தான் கோலின காலத்தில் கர்மசரீரத்தை விட்டுப் பரமபதத்திற்சென்று பகவானுடைய பாதமூலத்தை யடைவான் ப்ரபந்நன்) என்று சொல்லுகிறபடியே கர்பங்களை நிச்சேஷமாகக்கழித்து அப்ராக்ருததேசவிசேஷமாகிற ஸ்ரீவைகுண்டத்தைக்கிட்டி பகவானுக்கு ஸர்வதேச தசாகாலோசிதங்களான கைங்கர்யங்களை நித்யமாகச்செய்யும் ஸாம்ராஜ்யத்தைச் பெறுவான்.

பைரோஜி ஸ்ரீநிவாசாசாரியர்



## ஸபையின் 12-வது ஸம்வத்ஸர மஹாஸங்கம்.

இம்மஹாஸங்கம் திருக்குடந்தை பாகவதர்கள் சென்ற ஸம்வத்ஸர மஹாஸங்கத்தின் பொழுது ப்ரார்த்தித்தபடி அந்த திவ்யக்ஷேத்திரத்திலேயே வருகிற மார்கழி மீ'த்தில் நடைபெறும். வழக்கம்போல் பண்டிதர்களின் வித்வத்ஸதஸ்ஸும் உபந்யாஸங்களும் நடைபெறும். மஹாஸங்கத்தின் மற்றவிவரங்கள் கார்த்திகை மீ'த்திய ஸஞ்சிகையில் பிரசுரம் செய்யப்படும்.

பண்டிதர்களுக்கு ஸம்மானம் செய்வதற்கு வேண்டிய திரவ்யத்தை சேகரிப்பதற்காக தீபிகையின் சந்தாதாரர்களில் ஒவ்வொருவரும் மற்றும் நமது ஸபையின் கிருஷிதனை ஆமோதிக்கும் ஆஸ்திகர்களும் தங்கள் தங்களால் இயன்ற தொகைகளை மார்கழிமீ' முதல் தேதிக்குள் ஸபையின் கார்யதர்சியினிடம் வந்துசேரும்படி அனுப்பவேண்டுமாய் பிரார்த்திக்கப்படுகிறார்கள். பலதுளிகளே பெருவெள்ளமாகலாமென்பது விஜ்ஞாபனம் செய்யப்படுகிறது.

## வ்யாஸங்கள்.

### "ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்திர மஹாதேசிகன் ஸம்மானம்"

இதற்காக இந்தவருஷம் மசூலிப்பட்டணம் ராவ் ஸாஹிப் ஸ்ரீ. ஏ. டி. எஸ். ஸ்ரீநிவாஸ ராகவாச்சாரியர்ஸ்வாமி 15-ரூபாய் அளித்திருக்கிறார். "லக்ஷ்மீத்வம்" என்கிற விஷயத்தைப்பற்றி அபேக்ஷகர்கள் தமிழில் ஒரு வ்யாஸம் எழுதி அதை மார்கழிமீ' முதல் தேதிக்குள்ளாக ஸபையின் கார்யதர்சியிடம் வந்து சேரும்படி அனுப்பவேண்டியதென்றும் அதை ஸபைப்பண்டிதர்கள் சோதித்து முதல்தரமான வ்யாஸம் எழுதியதாகத்தீர்மானிக்கப் பட்டவருக்கு அந்த ஸம்மானத்தை அளிப்பதென்றும் வ்யாஸம் எழுதுபவர்கள் தங்கள் ஆசார்யர்களிடமிருந்தோ அல்லது தங்கள் ஸ்தலத்தில் வஸிக்கும் பெரியோர்களிடமிருந்தோ "வேறொருவருடைய உதவியின்றியே இவரால் இந்த வியாஸம் எழுதப்பட்டது" என்கிற ஒரு அத்தாக்ஷிப்பத்திரமும் மேற்படி வ்யாஸத்துடன் அனுப்பவேண்டியது என்றும் கூடிய

வரையில் வ்யாஸம் ஸ்வவசனேக்திகளில் இருக்கவேண்டியதென்றும் நிர்வாஹஸபை கமிட்டியார் தீர்மானித்திருக்கிறார்கள்.

தவிரவும் ஸபையின் கார்யதர்சி "சுருதி கீதை" யைக்குறித்து முதல் தரமாய் தமிழில் எழுதப்படும் வ்யாஸத்திற்கு ஸம்மானமாக 'ஸம்ஸ்க்ருத வியாக்யானத்துடன் கூடிய இரண்டு ஸம் டங்களுள்ள ஸ்ரீமத்பாகவதம்' ஒன்றைத்தான் ஸம்மானமாக அளிப்பதாகச் சொல்லியதைக் கமிட்டியார் அங்கீகரித்து அந்த வ்யாஸத்தையும் மேற்கண்ட மார்கழிமீ முதல் தேதிக்குள் அவரிடம் வந்து சேரும்படி பரீக்ஷயர்கள் அனுப்பவேண்டியதென்றும் அந்த வியாஸத்திற்கும் ஷை நிபந்தனைகள் உண்டென்றும் கமிட்டியார் தீர்மானித்திருக்கிறார்கள்.

ஸபையின் கர்யதர்சி.

## ஸ்ரீ. உப. இராகவாச்சாரியர் ஸ்வாமியின் பண்டு.

இந்த ஸ்வாமி ஸபையின் பண்டிதரான ஸ்ரீ. உப. இரங்கநாதாசாரியர் ஸ்வாமி கரூர், வாங்கல், முகவனூர், நாமக்கல் முதலான ஸ்தலங்களில் உபந்யாஸங்கள் செய்யவேண்டியதற்காக 100-ரூபாய் பண்டு சில மாதங்களுக்கு முன் அனுப்பினர். இந்த கைங்கரியத்தை நிறைவேற்ற ஸ்ரீ. உப. ரங்கநாதாச்சாரியர் ஸ்வாமி அந்த இடங்களுக்கு எழுந்தருளியிருப்பதாகத்தெரியவருகிறது. உபந்யாஸங்களின் விவரங்கள் பின்னால் பிரசுரம் செய்யப்படும்.

கார்யதர்சி.

## ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை.

### அக்டோபர்மீ மீந்தா வரவு ஜாப்தா.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ. உப. கே. எஸ். இராகவய்யங்கார், அரும்பாவூர் | ... | 1 | 8 | 0 |
| ஸ்ரீ. இராமலிங்க ரெட்டியார், ஆலம்பாடி | ... | 2 | 8 | 0 |
| ஸ்ரீ. காட்டு பெரியமுத்து மாச்சிரெட்டியார், அரும்பாவூர் | ... | 1 | 8 | 0 |
| ஸ்ரீ. உப. பி. டி. இரங்கஸாமி ஐயங்கார், குளித்தலை | ... | 1 | 8 | 0 |
| ஸ்ரீ. சங்கரையா, திருச்சினாப்பள்ளி | ... | 1 | 8 | 0 |
| ஸ்ரீ. உப. பி. இரங்கசாமி ஐயங்கார், குளித்தலை | ... | 1 | 8 | 0 |
| ,, கே. எஸ். வரதாச்சரியர், கரூர் | ... | 3 | 0 | 0 |
| ,, ஸி. வி. கிருஷ்ணஸாமி ஐயங்கார், பெட்டம் சேர்லா | ... | 3 | 0 | 0 |
| ,, வி. ஆராவமுத ஐயங்கார், தஞ்சாவூர் | ... | 3 | 0 | 0 |
| ,, கிடாம்பி. ஸ்ரீனிவாஸரங்காச்சாரியர், திருக்கண்ணமங்கை. | | 3 | 0 | 0 |
| ,, எஸ். கிருஷ்ணமாச்சாரியர், கீழ்பாக்கம் | ... | 1 | 8 | 0 |
| ,, டி. எஸ். இரகோபால ஐயங்கார், விருத்தாசலம் | ... | 3 | 0 | 0 |
| ,, வி. என். இராஜகோபால ஐயங்கார், திருவல்லிக்கேணி. | | 3 | 0 | 0 |

### அக்டோபர் மீத்திய வியாஸஸம்மானம் வரவு.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ. உப. ராவ் ஸாஹிப், டி. எஸ். ஸ்ரீனிவாஸ ராகவாச்சாரியர் மசூலிபட்டணம் | ... | 15 | 0 | 0 |
| ,, பி. ஆர். கிருஷ்ணஸாமி ஐயங்கார், எழும்பூர்-ஸம்ஸ்க்ருத ஸ்ரீமத் பாகவதம் வியாக்கியானத்துடன். | | | | |

### • அக்டோபர் மீத்திய வித்வத் ஸதஸ்ஸு வரவு.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ. உப. ஸி. வி. கிருஷ்ணஸாமி ஐயங்கார், பெட்டம் சேர்லா | ... | 7 | 0 | 0 |

### நிர்வாஹஸபை அங்கத்தினர்கள்.

ஸ்ரீ. உப. ஸி. வி. வெங்கட்ரமண ஐயங்கார், கோயமுத்தூர்.

---

எக்ஸிக்யுடிவ் போர்ட் மெம்பர்கள்—(தொடர்ச்சி.)

41. ,, என். ஸி. நரஸிம்மாசார்யர், கரூர்.
42. ,, வெ. கெ. திருமலை ஶேஷாசார்யர், மோஹனூர்.
43. ,, என். டீ. ஸ்ரீராமாசார்யர், திருப்பாப்புலியூர்.
44. ,, கே. வி. வெங்கடாசார்யர், நாமக்கல்.
45. ,, டி. ஸ்ரீநிவாஸய்யங்கார், திருவாரூர்.
46. ,, டி. ஸ்ரீநிவாஸய்யங்கார், டில்லி.
47. ,, எம். ராமஸ்வாமி அய்யங்கார், கும்பகோணம்.

* இந்தக் குறியிடப்பட்ட ஸ்வாமிகள் நிர்வாஹகமிட்டியின் அங்கத்தினர்கள்.

# ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, சென்னப்பட்டணம்

## போஷகர்கள்.

1. ஸ்ரீ. உப. ஆனரெபில் கே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், மயிலாப்பூர்.
2. „ „ கே. வி. ரங்கஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீரங்கம்.
3. „ „ திவான்பஹதூர், டி. டி. ரங்காசார்யர்.

## எக்ஸிக்யுடிவ் போர்ட் மெம்பர்கள்.

*1. ஸ்ரீ. உப. ராவ்பஹதூர், எஸ். ராமஸ்வாமி ஐயங்கார்—ஸபாத்யக்ஷர்.

| | | | |
|---|---|---|---|
| 2. | „ | வ. வெ. ஸ்ரீனிவாஸ ஐயங்கார். | ஸபாத்யக்ஷ ப்ரதிநிதிகள். |
| 3. | „ | எஸ். ராஜகோபாலாசாரியர் | |
| *4. | „ | ஸ்ரீ. வாஸுதேவாசார்யர். | |
| 5. | „ | டி. கோதண்டராம ஐயங்கார், தஞ்சாவூர். | கார்யதர்சிகள். |
| *6. | „ | பி. ஆர். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், எழும்பூர் | |

*7. „ கோமடம் எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார்—உதவி கார்யதர்சி.
*8. „ என். ஸ்ரீநிவாஸாசார்யர், புரசைபாக்கம்—தீபிகைபத்ராதிபர்.
9. „ டி. நரஸிம்ம ஐயங்கார், திருவல்லிக்கேணி.
10. „ டி. அநந்தாசார்யர், வேலூர்.
11. „ ஏ. வி. கோபாலாசார்யர், திருச்சிறுப்பள்ளி.
12. „ எஸ். பாட்ராசார்யர், மன்னார்குடி.
13. „ குமார சக்ரவர்த்தி ஐயங்கார், எல்லூர்.
14. „ வே. ஈ. சின்னஸ்வாமி ஐயங்கார், செங்கல்பட்டு.
15. „ ஆர். நரஸிம்ம ஐயங்கார், மாதவபுரம்.
16. „ கே. ஏ. வீரராகவாசார்யர், மதிராஸ்.
17. „ டி. இ. சடகோபாசார்யர், கூடலூர்.
18. „ ஸி. துரைஸ்வாமி அய்யங்கார், சித்தூர்.
19. „ ராவ் பஹதூர் என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், கும்பகோணம்.
20. „ எஸ். டி. கிருஷ்ண அய்யங்கார், மதுரை.
21. „ பி. கே. கருடாசார்யர், மைஸூர்.
22. „ டி. ரங்கஸ்வாமி ஐயங்கார், சைதாப்பேட்டை.
23. „ ராவ் ஸாஹிப் எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மயிலாப்பூர்.
24. „ எஸ். வரதாசார்யர், மயிலாப்பூர்.
25. „ வித்யாபூஷணம் எ. கோவிந்தாசார்யர், மைஸூர்.
26. „ ஸி. கோபாலாசாரியார், பூந்தமல்லி.
27. „ ஸி. பத்மநாப ஐயங்கார், மயிலாப்பூர்.
28. „ எஸ். ஸுந்தரராஜ ஐயங்கார், மயிலாப்பூர்.
29. „ என். ராஜகோபாலாசார்யர், „
30. „ எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கோமல்.
31. „ எஸ். வேதாந்தாசார்யர், திருவையாறு.
32. „ வித்வாந். ஆர். வி. கிருஷ்ணமாசார்யர், திருக்குடந்தை.
33. * „ வித்வாந். சேட்லூர் நரஸிம்மாசார்யர், புரசைபாக்கம்.
34. „ வி. தேசிகாசார்யர், புரசைபாக்கம்.
35. * „ எம். எஸ். கிருஷ்ணமாசார்யர், புரசைபாக்கம்.
36. * „ ம. வி. நீலமேகாசாரியர், புரசைபாக்கம்.
37. „ எஸ். ஆர். தேசிகாசாரியர், ஸ்ரீவைகுண்டம்.
38. * „ ஆர். ஸ்ரீநிவாஸராகவாசார்யர், புரசைபாக்கம்.
39. „ கே. டி. பார்த்தஸாரதி அய்யங்கார், வேலூர்.
40. „ டி. ஈ. பார்த்தஸாரதி அய்யங்கார், நாமக்கல்.

(உள்புறம் பார்க்கவும்.)